செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை - 2024

செலவினத் தலைப்பு இலக்கம் : 238

அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி
அமைச்சு
கொழும்பு 01

பொருளடக்கம்

1.0 நிறுவனக் கட்டமைப்பு / நிறைவேற்றுகையின் சுருக்கம்

1.1 அறிமுகம் 1
1.2 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று...2
1.3 நோக்கங்களும் தொழிற்பாடுகளும்..2
1.4 நிறுவனக்கட்டமைப்பு...3

2.0 முன்னேற்றம், சவால்கள் மற்றும் இலக்குகள்...4

2.1 மேன்நோக்கு...5
2.2 வரிக் கொள்கை சீர் திருத்தம்...10
2.3 அரசாங்க வருமானச் செயலாற்றுகை...12
2.4 சவால்களும் எதிர்கால இலக்ககளும்..35

3.0 2024 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை.. 36

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று...37
3.2 நிதி நிலைமைக் கூற்று..38
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று... 39
3.4 அறிக்கையிடலின் அடிப்படை...40
3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை...41
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை...41
3.7 நிதிப் பிரமாணக்குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத் திணைக்களம் செலவினத்திற்கான ஒதுக்கீட்டு வழங்கல்..................41
3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை...........................42
3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..42

4.0 செயலாற்றுகை குறிகாட்டிகள்...50

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள்...51

5.0 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதன் செயலாற்றுகை 54

5.1 சுட்டிக்காட்டப்பட்ட மற்றும் அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 55
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றம் சவால்களை சுருக்கமாக விளக்குக...55

6.0 மனித வளம் பற்றிய தொகுப்பு...57

6.0 ஆளணி முகாமைத்துவம்...58
6.2 மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகையானது. நிறுவனத்தின் செயலாற்றுகையை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக 58
6.3 மனித வளஅபிவிருத்தி..58

7.0 இணக்க அறிக்கை..64

அத்தியாயம் 1

நிறுவனக் கட்டமைப்பு / நிறைவேற்றுகையின் சுருக்கம்

நிறுவனக் கட்டமைப்பு / நிறைவேற்றுகையின் சுருக்கம்

1.1 அறிமுகம்

இலங்கையானது உகந்த சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், நிரல் அமைச்சுக்கள் மற்றும் தனியார் துறையினருடன் கலந்தாலோசித்து அரசாங்கத்தின் பரந்தளவிலான அபிவிருத்தி வேலைச்சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கையினை உருவாக்குவதும் மற்றும் அதனைச் செயற்படுத்துவதும் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பிரதான இலக்குகளாகும்.

அரசிறைக் கொள்கையில், எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகளை அடைவதற்குத் தேவையான மிகச் சரியான சீர்செய்கைகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில், வருமானம், செலவினம் நிதியளிப்புச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டினதும் உலக ரீதியானதுமான பேரினப் பொருளாதார அபிவிருத்திகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்தல் மட்டுமன்றி, பிரதானமாக நாட்டின் வரி விதிப்புக் கொள்கை ஆகியவற்றிற்கு இத்திணைக்களம் முக்கிய பொறுப்பாகவுள்ளது.

1.2 தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

<u>தொலைநோக்கு</u>

"நிலைபேறான அரசிறைக் கொள்கை வேலைச் சட்டகமொன்று நிறுவப்படுவதை உறுதிசெய்தல்"

பணிக்கூற்று

"அரசின் பரந்தளவிலான அபிவிருத்தி செயற்பாட்டுச் சட்டகத்தினுள் அரசிறைக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்"

1.3 நோக்கங்களும் தொழிற்பாடுகளும்

- அரசாங்க, தனியார் மற்றும் சர்வதேச முகவர் நிறுவனங்களை ஒருங்கிணைத்து அரசிறைக் கொள்கையையும் நடுத்தர கால அரசிறை மூலோபாயத்தினையும் உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தல்.
- சுங்கத் தீர்வை மற்றும் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தவிர்ந்த, வரிக் கொள்கை மற்றும் அதனோடு தொடர்பான நியதிச்சட்டங்களை உருவாக்குதல்.
- அரசிறை விளைவுகள் மற்றும் அரசிறைச் செயற்பாடுகளினை முகாமை செய்தலும் மீளாய்வு செய்தலும்.
- வருமானத்தினைத் திரட்டுதல், தேசிய வரவுசெலவுத் திட்டம் மற்றும் நிதி அமுலாக்கல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள திணைக்களங்களோடு முறையாக ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.
- காலத்திற்குக் காலம் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களின் பிரகாரம் வருமானம் பற்றிய சட்டவாக்கங்களின் திருத்தங்கள் தொடர்பான பணிகளைக் கொண்டுநடாத்துதல்.
- 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, அரசிறை முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் உட்பட தேவைப்பாடுகளை படுத்துதல்.
- பேரின அரசிறை அலகின் பிரிவின் உதவியுடன் பல்வேறு அரசிறை மற்றும் பேரினப் பொருளாதார விடயங்களில் பகுப்பாய்வு/ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்,
- வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சட்டங்களைத் திருத்துதல் மற்றும் வர்த்தமானிகளைத் தயாரித்தல்.

1.4 நிறுவனக் கட்டமைப்பு



பி.ப: பிரதிப் பணிப்பாளர்

உ.ப: உதவிப் பணிப்பாளர்

நி.உத்.: நிருவாக உத்தியோகத்தர்

மொ.: மொழிபெயர்ப்பாளர்

அ.உத்.: அபிவிருத்தி உத்தியோகத்தர்

மு.சே.உத்.: முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

அ.உ.சே.: அலுவலக உதவியாளர் சேவை

அத்தியாயம் 02

முன்னேற்றம், சவால்கள் மற்றும் இலக்குகள்

உ·1 மேன்நோக்கு

2024 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கான ஆரம்ப மிகையுடன் கூடிய அறிக்கையிடலுடன் நிதித்துறையின் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகையானது 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு பின்னர், இலங்கையின் பொருளாதார ஸதிரத்தன்மைக்கு பிரதானமாகப் பங்களிப்பு செய்தது. 2022 ஆம் ஆண்டில் அரசாங்க வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.3 சதவீதமாக வரலாற்று ரீதியாகவும் உலகளாவிய ரீதியாகவும் குறைவடைந்தமையால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறை விரிவடைந்தமை பொருளாதார நெருக்கடிக்கு ஒரு முக்கிய காரணமாகும். அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடுமையான வருமான மேம்பாட்டு மற்றும் செலவின பகுப்பாய்வு முயற்சிகளால் பயனடைந்து, 2023 ஆம் ஆண்டில் ரூபா 173.3 பில்லியன் அல்லது 0.6 சதவீதமாக இருந்த ஆரம்ப மிகை, 2024 ஆம் ஆண்டில் ரூபா 649.6 பில்லியன் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.2 சதவீதமாக அதிகரித்து நிதி இடைவெளியானது மேலும் விரிவடைந்தது. 2024 ஆம் ஆண்டில் ஆரம்பமிகையானது, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி (IMF-EFF) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூபா 300 பில்லியன் இலக்கைத் தாண்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டில், மானியங்கள் உட்பட மொத்த அரசாங்க வருமானமானது பெயரளவு நியதிகளின் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. இது வருமான மேம்படுத்தல் முயற்சிகளின் நேர்மறையான விளைவுகள், வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சி ஆகியவற்றினைப் பிரதிபலிக்கின்றது. அதே போன்று மொத்த அரசாங்க வருமானம் மற்றும் மானியங்கள், 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் 99.1 சதவீதத்தை எட்டியமையானது இலங்கையின் நிதியியல் வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த சாதனை விகிதமாகும். பெயரளவு நியதிகளின் அடிப்படையில், மானியங்கள் உட்பட மொத்த அரசாங்க வருமானம் 33.1 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டின் ரூபா 3,074.3 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 4,090.8 பில்லியனாக அதிகரித்தது. மானியங்கள் தவிர்ந்த அரசாங்க வருமானம், 2023 ஆம் ஆண்டில் ரூபா 3,048.8 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 32.2 சதவீதம் அதிகரித்து ரூபா 4,030.8 பில்லியனாக அதிகரித்துள்ளது.

அதே வழியில், வருடாந்த மதிப்பீட்டை 0.6 சதவீத புள்ளிகளால் விஞ்சும் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மானியங்கள் உள்ளடங்கலான அரசாங்க வருமானம், 2023 ஆம் ஆண்டில் 11.2 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக, வரி அல்லாத வருமானம் 0.1 சதவீத புள்ளிகளால் குறைவடைந்துள்ள நிலையிலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரி வருமான விகிதம் 2.5 சதவீத புள்ளிகள் அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.4 சதவீதமாக அதிகரித்ததே ஆகும். 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரி வருமானம ஆனது, 2024 ஆம் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த மதிப்பீடான 12.1 சதவீதத்தை விட 0.3 சதவீத புள்ளிகளால் அதிகமாகும். இது பெருந்தொற்று நோய்க்கு முன்னர் அதாவது 2015 இற்கும் 2019 இற்கும் இடையில் ஐந்து ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட சராசரியான 11.4 சதவீதத்தை விட அதிகமாகும். 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வரி விகிதத்தின் அதிகரிப்பானது, வரித் தளத்தை விரிவுபடுத்துதல், இணக்கம் மற்றும் வருமான நிர்வாகத்தை மேம்படுத்துதல், பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி வருமான சேகரிப்பிலிருந்து 2.2 சதவீத புள்ளி அதிகரிப்பு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் உள்ளிட்ட அரசாங்கத்தின் நிதிக் கொள்கைச் சீர்திருத்தங்களால் ஏற்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான 13.0 சதவீதமாக எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டை விட 0.5 சதவீத புள்ளிகளால் விஞ்சும் வகையில், மானியங்கள் தவிர்ந்த வருமானம் 2023 ஆம் ஆண்டில் 11.1 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 2.4 சதவீத புள்ளிகள் அதிகரித்து 13.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அட்டவணை உ·1 | அரசாங்க வருமானத்தின் சுருக்கம்

ரூ.மில்லியன்

விடயம்	2021	2022	2023	2024 (அ)
மொத்த வருமானம், மானியங்கள்	1,463,810	2,012,589	3,074,324	4,090,808
மொத்த வருமானம்	1,457,071	1,979,184	3,048,822	4,030,838
வரி வருமானம்	1,298,019	1,751,132	2,720,563	3,704,577
வருமான வரி	302,115	534,021	911,355	1,026,199
பொருட்கள், சேவைகள் மீதான வரி	646,068	875,995	1,420,089	2,200,890
வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள்	349,836	341,116	389,118	477,488
வரியல்லாத வருமானம்	159,052	228,052	328,259	326,261
மானியங்கள்	6,740	33,405	25,502	59,970
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக				
வருமானம் மற்றும் மானியங்கள்	8.3	8.4	11.2	13.7
மொத்த வருமானம்	8.3	8.2	11.1	13.5
வரி வருமானம்	7.4	7.3	9.9	12.4
வரியல்லாத வருமானம்	0.9	0.9	1.2	1.1
மானியங்கள்	0.04	0.1	0.1	0.2

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வரலாற்றில் முதன் முறையாக, வருமான வரியிலிருந்தான வருமானம் ஆனது, ரூபா 1 டிரில்லியனைத் தாண்டி, 2023 ஆம் ஆண்டில் ரூபா 911.4 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,026.2 பில்லியனைத் எட்டியது. இவ் அடைவானது, நாட்டின் வருமானத் திரட்டல் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கின்ற வகையில், ஆண்டுக்கு ஆண்டு 12.6 சதவீத வளர்ச்சியையும், 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வருமான மதிப்பீட்டில் 95.0 சதவீதத்தை எட்டியதையும் பிரதிபலிக்கின்றது. 2023 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்ட விரிவான வரிக் கொள்கை சீர்திருத்தங்களானவை வருமான வரி அடிப்படையை கணிசமாக விரிவுபடுத்தியதுடன் வருமான வினைத்திறனையும் மேம்படுத்தியமையால் இவ் வலுவான செயலாற்றுகை பெரும்பாலும் உந்தப்பட்டது. இத்தகைய் சீர்திருத்தங்கள் மிகவும் முன்னேற்றகரமான, எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய வருமான வரி முறைமையை நோக்கிய ஒரு செயல்நுணுக்க பெயர்வை பிரதிபலிக்கின்றது. வருமான செயலாற்றுகையில் ஏற்பட்டுள்ள கட்புல முன்னேற்றம், வரி செலுத்துவோரின் இணக்கம அதிகரிப்பதையும், நிர்வாக வினைத்திறன் அதிகரிப்பதையும் குறிக்கிற அதேவேளை நிதித் திரட்டலில் நன்கு அளவிடு செய்யப்பட்ட வரிக் கொள்கையின் முக்கிய பங்கை மீள்உறுதிப்படுத்துகின்றது. 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை மாற்றங்களின் முழுத் தாக்கத்தையும் 2024 ஆம் ஆண்டில் உணர்ந்துகொண்டமை, பொது மற்றும் தனியார் துறைகளில் அதிகரித்த ஊதியங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை போன்றவை இவ் அடைவை ஏற்படுத்திய முக்கிய காரணங்களாகும்.

குறிப்பிடத்தக்க அடைவாக, வரலாற்றில் முதன் முறையாக ரூபா 1 டிரில்லியனைத் தாண்டும் வகையில், பெறுமதிசேர் வரியிலிருந்தான (VAT) வருமானம், 2023 ஆம் ஆண்டில் ரூபா 694.5 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,309.7 பில்லியனாக 88.6 சதவீதம் அதிகரித்தது. 2024 ஆம் ஆண்டில் அரசாங்க வருவாயில் மிகப்பெரிய பெயரளவிலான பங்களிப்பை பெறுமதிசேர் வரி வருமானம் வழங்கியுள்ளது. உள்நாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதிசேர் வரி வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 469.1 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 712.2 பில்லியனாக 51.8 சதவீதம் அதிகரித்ததுடன், இறக்குமதிகளிலிருந்தான பெறுமதிசேர் வரி வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 225.4 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டின் ரூபா 597.5 பில்லியனாக 165.1 சதவீதம் அதிகரித்துள்ளது. இம் மேலதிக செயலாற்றுகை முக்கியமாக பெறுமதிசேர் வரி விகிதத்தில் மேல்நோக்கிய திருத்தம், பெறுமதிசேர் வரிக்கான பதிவு வரம்புநிலைக் குறைப்பு மற்றும் 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதிசேர் வரி விலக்குகளில் பெரும்பகுதியை நீக்குதல் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளைப் படிப்படியாக நீக்குதல் ஆகியவற்றால் உந்தப்பட்டது. பெறுமதிசேர் வரியிலிருந்தான வருமானத்தில் வலுவான வளர்ச்சி இருந்தபோதிலும், இந்த அடைவு வருடாந்த மதிப்பீட்டில் 93.5 சதவீதத்தை குறிக்கின்றமையானது, செயலாற்றுகை வலுவாக இருக்கின்ற அதேவேளை வருமான சேகரிப்பு செயற்திறனில் மேலும் முன்னேற்றத்திற்கான சில வாய்ப்புகள் உள்ளன என்பதைக் சுட்டிக் காட்டுகின்றது.

கட்டம் 2·1 | 2024 இல் முக்கிய வருமான நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட முக்கிய வரி நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வழி

இலங்கையின் முக்கிய வருமான நிறுவனங்களான உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் ஆகியவை வருமானம் திரட்டல், இணக்கம், வெளிப்படைத்தன்மை ஊழல் பாதிப்புகளைக் குறைத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக முக்கிய நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொண்டன. 2024 இல் செயல்படுத்தப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்:

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பரிந்துரைகள் சர்வதேச பணமோசடி எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதி ஒப்பந்தங்களின் கீழ் உள்ள உறுதிமொழிகளுடன் வரி தொடர்பான குற்றங்கள் குறித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குற்றவியல் விசாரணைகளைத் தொடங்கியது.
- வேலைவாய்ப்பு மற்றும் வட்டி வருமானம் மட்டுமே உள்ள தனிநபர்களுக்காக 2023/2024 மதிப்பீட்டு ஆண்டுக்காக எளிமைப்படுத்தப்பட்ட தனிநபர் வருமான வரி திருப்பல் படிவத்தை அறிமுகப்படுத்தியது.
- வரி இணக்க கண்காணிப்பில் செயல்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, அதன் கணக்காய்வுத் தேர்வு முறையை இடர் அடிப்படையிலான அணுகுமுறைக்கு மாற்றுவதன் மூலம் இடர் மேலாண்மை அலகை விரிவுபடுத்தியது.
- 2025 அக்டோபர் இல் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி (SVAT) முறை ஒழிக்கப்படுவதைத் தொடர்ந்து, ஏற்றுமதியாளர்களுக்கான பெறுமதிசேர் வரி மீளப்பெறல்களை விரைவுபடுத்துவதற்காகவும் இந்தத் பண மீளப்பெறல்களைக் கையாளவும் பிரத்தியேகமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏற்றுமதியாளர் மீளப்பெறல் அலகை நிறுவியுள்ளது.
- அமலாக்கத் திறன்களை மேம்படுத்துவதற்காக 2025 ஜனவரி 20 அன்று ஒரு பிரத்தியேக குற்றப் புலனாய்வுப் பிரிவினை தாபித்தது.
- மனிதவள முகாமைத்துவ பிரிவின் சில செயல்பாடுகளை மாற்றி, ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறலில் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணங்கக் கூடிய வகையில் உள் செயல்முறைகளை மேற்பார்வையிடுவதற்காக 2025 மார்ச் 20 அன்று உள் விவகாரப் பிரிவை நிறுவியது.

கட்டம் 2.1 | 2024 இல் முக்கிய வருமான நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட முக்கிய வரி நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வழி தொடர்ச்சி.....

முன்னோக்கி செல்லும் வழி:

வரி நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்தவும் இணக்கத்தை மேம்படுத்தவும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பல மூலோபாய முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. கணக்காய்வு மற்றும் பணத்தைத் மீளப்பெறல் நடவடிக்கைகளில் அதன் பங்கை வலுப்படுத்தவும், அதன் செயல்பாட்டு திறன் மற்றும் பகுப்பாய்வு திறன்களை அதிகரிக்க இடர் முகாமைத்துவ அலகு மேம்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்றுமதி பணத்தைத் மீளப்பெறும் செயல்முறையை நெறிப்படுத்த ஏற்றுமதி பணத்தைத் மீளப்பெறல் சரிபார்ப்பு அலகு மற்றும் ஏற்றுமதி பணத்தைத் மீளப்பெறல் செயற்பாட்டு அலகு மற்று் ஆகிய இரண்டு சிறப்பு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி திட்டம் ரத்து செய்யப்பட்டதன் காரணமாக பணத்தைத் திரும்பப்பெறும் கோரிக்கைகளில் ஏற்படும் அதிகரிப்பிற்கான தயாரிப்பில், துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை உறுதிசெய்ய ஆபத்து அடிப்படையிலான பெறுமதிசேர் வரி பணத்தைத் திரும்பப்பெறும் செயலாக்க அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும், 2025 அக்டோபர் 1 அன்று இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறை ரத்து செய்யப்படுவதற்கு முன்னதாக, 2025 ஜூலை 1 க்குள் பெறுமதிசேர் வரி வருமானங்களை கட்டாயமாக மின்-நிரப்பல் செய்வதற்கு வசதியாக ஒரு விரிவான பெறுமதிசேர் வரி இணக்க மேம்பாட்டுத் திட்டம் நடந்து வருகிறது. அதே நேரத்தில், 2024 ஆண்டு முதல் புதிதாகப் பதிவுசெய்யப்படுகின்ற வரி செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நிவர்த்தி செய்ய வருமான வரி இணக்க மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இலங்கை சுங்கம்:

- நிறுவன நிலையான முன்னேற்றங்களை உறுதி செய்வதற்கும், செயல்படக்கூடிய செயல் திட்டம் மற்றும் கண்காணிப்பு அமைப்பின் ஆதரவுடன் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் வரி நிர்வாகம், வர்த்தக வசதி மற்றும் அமுலாக்கத்தில் ஒரு 2024-2028 மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- இலங்கை சுங்கத்துறையில் உள்ள தவறான நடத்தை, ஊழல் மற்றும் நெறிமுறையற்ற நடைமுறைகள் குறித்த புகார்களை விசாரிப்பதன் மூலம் நிறுவன ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு இணங்க, பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் ஒரு உள் விவகாரப் பிரிவை நிறுவியது.
- "சரியான நேரத்தில் சரியான வேலையில் சரியான மனிதரை நியமித்தல்" என்ற கொள்கையின் மூலம், நிறுவன முன்னுரிமைகளுடன் தலைமைப் பாத்திரங்களை மூலோபாய ரீதியாக சீரமைக்கவும், செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தவும், வருவாய் செயல்திறனை மேம்படுத்தவும் சிரேஸ்ட முகமைத்துவ பரிமாற்றக் கொள்கை திருத்தப்பட்டது.
- முக்கிய கட்டளைகளினால் வாராந்த அறிக்கையிடல் மூலம் நிறுவன செயல்திறனை மேம்படுத்தவும், ஆக்கபூர்வமான போட்டியை வளர்க்கவும், நிலுவை அனுமதியை துரிதப்படுத்தவும், ஒட்டுமொத்த வருமான வசூலை கனிசமாக அதிகரிக்கவும் "80-நாள் சிறப்புத் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது.
- இணக்கமான வர்த்தகர்களுக்கு வர்த்தக வசதி மற்றும் செயல்பாட்டுத் திறனை ஊக்குவிக்கும் அதே வேளையில், அதிக ஆபத்துள்ள சரக்குகளை திறம்பட கையாள்வதன் மூலம் வருவாய் பாதுகாப்பை மேம்படுத்த இடர் மேலாண்மை அளவுகோல்கள் திருத்தப்பட்டது.
- பொருத்தமற்ற இறக்குமதிகளைக் கண்டறிவதற்காகவும் அதிகரித்த கூடுதல் வருவாயை ஈட்டுவதற்கும் ஒரு உயர் "தாக்க விகிதத்தை" உருவாக்குவதற்கும் ஒரு கொள்கலன் சரக்கு பரிசோதனைக் கண்காணிப்பு மேம்படுத்தப்பட்டது.
- முறையான வர்த்தகத்தை எளிதாக்கும் அதே வேளையில் வருவாயை அதிகப்படுத்துவதற்காக வலுவான நிறுவன உறுதிப்பாட்டை பிரதிபலிக்க கூடிய வகையில் வரி நிர்வாகத்திற்கு ஒரு மூலோபாய, செயல்திறன் சார்ந்த மற்றும் அபாய பிரதிபலிப்பு அணுகுமுறையை கைக்கொண்டது.

முன்னோக்கி செல்லும் வழி:

வருமான நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை ஆழப்படுத்துதல் மற்றும் செயல்திறன் மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தை உட்பொதித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும். செயல் திட்டத்தின் வலுவான கண்காணிப்புடன், 2024-2028 மூலோபாயத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இணக்கம் மற்றும் வர்த்தக வசதியை மேம்படுத்த இடர் அடிப்படையிலான அமுலாக்கம் மற்றும் தரவு சார்ந்த தீர்மானம் எடுத்தல் மேம்படுத்தப்படும். மனித வள திறன் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு வலுப்படுத்தப்படும். இந்த நடவடிக்கைகள் வெளிப்படையான, மீள்தன்மை கொண்ட மற்றும் உயர் செயல்திறன் கொண்ட வரி நிர்வாகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

மதுவரித் திணைக்களம்:

- தரவு பரிமாற்றத்திற்கான தொடர்புடைய அரசு நிறுவனங்களை அடையாளம் கண்டு தேவைகளின் அட்டவணையை (SOR) தயாரித்து, திட்டத்தை செயல்படுத்துவதை மேற்பார்வையிட ஒரு சிறப்பு ஆலோசகரை நியமிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட வருமான நிர்வாக முறையை செயல்படுத்தத் தொடங்கியது.

கட்டம் 2.1 | 2024 இல் முக்கிய வருமான நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்ட முக்கிய வரி நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வழி தொடர்ச்சி....

- வீட்டு மற்றும் வணிக மட்டங்களில் சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருட்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த, தரமற்ற மதுபானங்களின் புழக்கத்தைக் குறைத்து அமுலாக்க திட்டங்கள் மூலம் வருவாயை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, 100 நாள் சிறப்பு அமுலாக்க நிகழ்ச்சித்திட்டத்தை (20.05.2024 முதல் 27.08.2024 வரை) செயல்படுத்தியது.
- பொதுமக்களின் ஈடுபாட்டை வலுப்படுத்தவும், குடிமக்களின் புகார்களுக்கு முன்னுரிமை அளிக்கவும், வருவாய் வசூலை அதிகரிக்க பங்களிக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் 24 மணி நேர உடனடித் தொடர்பு எண் 1913 ஐ அறிமுகப்படுத்தியது.
- மதுபானங்கள் மீதான கடுமையான தரக் கட்டுப்பாடுகளை நிலைநிறுத்துவதற்காக ஒரு மைய ஆய்வகத்தை நிறுவியது. இதன் மூலம் இணக்கமான தயாரிப்புகளின் சந்தை நுழைவை எளிதாக்குதல் மற்றும் மேம்பட்ட ஒழுங்குமுறை அமுலாக்கம் மூலம் வருமானத்தை அதிகரித்தல்
- மதுவரி வருமான சேகரிப்புடன் தொடர்புடைய அபாயங்களை அடையாளம் காணவும், மதிப்பிடவும், குறைக்கவும் ஒரு இடர் முகாமைத்துவ பிரிவை நிறுவியது. இதன் மூலம் வருமான ஒருமைப்பாட்டை மேம்படுத்துதல், இழப்புகளைக் குறைத்தல் மற்றும் ஒட்டுமொத்த வருமான முகாமைத்துவ செயல்திறனை மேம்படுத்துதல்.
- வருமானம் தொடர்பான மோசடி மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்டறிந்து தடுப்பதை ஆதரிப்பதற்கும் நிதி மேற்பார்வையை மேம்படுத்துவதற்கும் ஒரு நிதி புலனாய்வுப் பிரிவை (FIU) நிறுவியது.
- உள் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தவும், குறைகளை திறம்பட கையாள்வதை உறுதி செய்யவும், அதன் மூலம் வருமான வசூல் செயல்முறைகளைப் பாதுகாக்கவும் ஒரு உள் விவகாரப் பிரிவு (IAU) மற்றும் ஒரு முறைப்பாட்டு முகாமைத்துவம் மற்றும் புலனாய்வுப் பிரிவை அமைத்தல்.
- போலிப் பொருட்களின் பழக்கத்தைத் தடுப்பதன் மூலமும், சந்தையில் மதுவரி விதிக்கக்கூடிய பொருட்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதன் மூலமும் மதுவரி வருமானத்தைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு அம்சங்கள் முகாமைத்துவ அமைப்பை வலுப்படுத்துதல்.

முன்னோக்கிய வழி

மதுவரி திணைக்களமானது முறையான வரி வசூலிப்பை உறுதி செய்யும் வகையில் புகையிலை வரிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலமும், அனைத்து பீடி உற்பத்தியாளர்களையும் மீண்டும் பதிவு செய்வதற்கான மதுவரி அறிவிப்புகளை வெளியிடுவதன் மூலமும் வரி நிர்வாகத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும். மதுபான போத்தல்களில் பாதுகாப்பு அம்சங்கள் ஸ்டிக்கர் வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களைப் புதுப்பிப்பதன் மூலம் மேம்படுத்தப்படும், மேலும் சந்தையில் போலி ஸ்டிக்கர்களைக் கண்டறிந்து போலி தயாரிப்புகளைக் குறைக்க புதிய மென்பொருள் இடப்படுகின்றது. மேம்படுத்தப்பட்ட கணக்காய்வுகள் மூலம் வருமானத்தை அதிகரிக்க மாதாந்த மதிப்பாய்வுகளுடன் மதுவரி அதிகாரிகளுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்படும். நிலுவையில் உள்ள வரிகளை மீட்டெடுப்பதற்கும் உதவும் வகையில், சட்டத் திருத்தங்கள், தவறு செய்பவர்களுக்கான உரிமங்கள் மற்றும் உற்பத்தியை நிறுத்தி வைப்பதற்கு இயலுமாய் இருக்கும். மேலும், வீன்விரயம் தொடர்பான வரி நிர்வாகத்தை மேம்படுத்த மதுவரி அறிவிப்புகள் மூலம் நடைமுறை கழிவு சதவீதங்கள் அறிமுகப்படுத்தப்படும். மேலும், மதுவரி திணைக்கள முறைமை மென்பொருளுக்கான வருமான நிர்வாக முறைமையை (RASED) உருவாக்குவதற்கும், பிற அரசாங்க முகவர்களுடன் ஆன்லைன் ஒருங்கிணைப்பை நிறுவுவதற்கும், செயல்திறன் மற்றும் ஒருங்கிணைப்பை மேலும் மேம்படுத்துவதற்கும் ஒரு சேவை வழங்குநர் கேள்வி அறிவித்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பெறுமதிசேர் வரியிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட விதிவிலக்கான அதிகரிப்பானது, விரிவான பரந்த பேரினப் பொருளாதார மீட்சியிலிருந்து பெறுமதிசேர் வரித் தளத்தை விரிவாக்கியமை மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளில் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றிலிருந்து உருவான மேம்பட்ட நுகர்வுப் போக்குகள், போன்றவறின் நேர்மறையான தாக்கங்களைக் குறிக்கின்றது. 2024 ஆம் ஆண்டு சனவரி 01 முதல் ஆண்டுக்கு ரூபா. 120 மில்லியனிலிருந்து ஆண்டுக்கு ரூபா 60 மில்லியனாகக் குறைக்கப்பட்ட பதிவு வரம்புநிலை மற்றும் இறக்குமதி அதிகரிப்பு காரணமாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்தான (SSCL) வருமானம் ஆனது 2023 ஆம் ஆண்டில் ரூபா 216.2 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 250.9 பில்லியனாக 16.0 சதவீதம் அதிகரித்துள்ளது.

வருமானத்தில் சற்று வீழ்ச்சியடைந்த சிகரெட்டுகள் தவிர, உற்பத்திவரி விதிக்கப்படக் கூடிய அனைத்து பொருட்களிலிருந்துமான வருமானம் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உற்பத்தி வரியிலிருந்து கிடைக்கும் வருமானமானது 2023 ஆம் ஆண்டில் 1.7 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.0 சதவீதமாக அதிகரித்துள்ளது. அனைத்து வகையான பெற்றோல் மற்றும் டீசல் இறக்குமதியில் நிகர அதிகரிப்பு மற்றும்

கட்டம் 2.2 | இலங்கையின் தேசிய தீர்வைக் கொள்கை

தெற்காசியப் பிராந்தியத்தில் செழிப்பை நோக்கி அதன் பொருளாதாரத்தை மேம்படுத்த, வர்த்தகம் மற்றும் நிதி தாராளமயமாக்கல் உள்ளிட்ட ஏற்றுமதி தலைமையிலான திறந்த பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை ஏற்றுக்கொண்ட முதல் நாடு இலங்கையாகும். இலங்கை அதன் திறந்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து பயனடைந்த போதிலும், அதிகாரத்திலுள்ள அரசாங்கத்தின் சமூக மற்றும் அரசியல் சித்தாந்தங்களுக்கு ஏற்ப பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் காரணமாக அதன் ஏற்றுமதி தலைமையிலான வளர்ச்சிப் பாதையைத் தக்கவைக்கத் தவறிவிட்டது.

இது இறுதியில் இலங்கையில் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைக்க வழிவகுத்தது. இலங்கையில் தற்போதுள்ள கட்டண முறை "ஏற்றுமதி எதிர்ப்பு சார்பு வரி முறை" ஆகும், இது நிறுவனங்களை ஏற்றுமதிக்கு ஊக்குவிக்க முடியாது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு பங்காக, இலங்கையின் ஏற்றுமதி மதிப்பு 2000 ஆம் ஆண்டில் 39 சதவீதத்திலிருந்து 2021 இல் 18 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது நடுத்தர வருமான நாடுகளிடையே ஏற்றுமதி செயற்திறனின் குறைந்த மட்டமாகும். 2000 ஆம் ஆண்டில், உலகின் மொத்த பொருட்களின் ஏற்றுமதியில் ஒவ்வொரு ஐ.அ.டொ. 10,000 மதிப்புள்ள பொருட்களிலும் இலங்கை 8 அமெரிக்க டொலர்களைக் கொண்டிருந்தது. பொருளாதாரக் கொள்கை மாற்றியமைத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் ஏற்றுமதியின் இந்தப் பங்கு 2021 இல் வெறும் ஐ.அ.டொ. 5 ஆகக் குறைந்துள்ள அதே காலகட்டத்தில் வியட்நாம் அதன் உலக ஏற்றுமதி சந்தைப் பங்கை ஐ.அ.டொ. 23 இலிருந்து ஐ.அ.டொ. 123 ஆக உயர்த்தியது.



மூலம்: உலக அபிவிருத்திச் சுட்டிகள்



இந்தச் சூழலில், உலக வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் நிபுணத்துவத்தின் கீழ், இலங்கையை பிராந்தியத்தில் ஒரு போட்டித்தன்மை வாய்ந்த வர்த்தக மற்றும் முதலீட்டு இடமாக மாற்றுவதற்காக வெளிப்படையான மற்றும் மலிவான தீர்வைக் கட்டமைப்பை நோக்கமாகக் கொண்டு இலங்கையின் தேசிய தீர்வைக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய தீர்வைக் கொள்கையை செயற்படுத்துவதன் மூலம், பயன்படுத்தப்படாத பொருட்களின் ஏற்றுமதி திறனை வெளிக்கொணர்ந்து, (i) இறக்குமதி வரிகளை பகுத்தறிவு செய்து அவற்றின் அடுத்தடுத்த விளைவுகளைக் குறைப்பதன் மூலம் தற்போதைய தீர்வைக் கட்டமைப்பை ஏற்றுமதி எதிர்ப்பு சார்புகளைக் குறைத்தல், (ii) தற்போதுள்ள தீர்வைக் கட்டமைபபின் சிக்கலான தன்மை மற்றும் நிச்சயமற்ற தன்மையை நீக்குதல், (iii) தீர்வைக் கட்டமைபபின் வெளிப்படைத்தன்மை மற்றும் கணிக்கக்கூடிய தன்மையை உறுதி செய்தல், (iv) பாதிக்கப்படக்கூடிய துறைகள் / தொழில்களை அடையாளம் கண்டு, இடம்பெயர்ந்த தொழிலாளர்களை மீண்டும் திறன் பெறச் செய்யும் போது நிலைப்படுத்தவும் வளரவும் காலக்கெடுவுக்குள் ஆதரவை வழங்குதல் (v) மூலப்பொருட்கள், இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்களின் இறக்குமதி மீதான வரிகள் மற்றும் வரிகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல், (vi) உள்நாட்டு நிறுவனங்களின் சமநிலையை உறுதி செய்வதற்கும் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் வரிச் செலவினங்களைக் குறைப்பதற்கும் இறக்குமதி வரி விலக்கு அல்லது சலுகையை படிப்படியாக நீக்குதல்.

அதன்படி, "இலங்கையின் தேசிய தீர்வைக் கொள்கை" என்ற தலைப்பிலான 2024 மே 31 ஆந் திகதிய 24/1072/604/114 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2024 ஜூன் 11 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தேசிய தீர்வைக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக, தேசிய தீர்வைக் கொள்கைக் குழுவின் பரிந்துரை விதிமுறைகள் 2025 மார்ச் 10 ஆந் திகதிய 25/0441/804/054 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், 2025 மார்ச் 17 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, தேசிய தீர்வைக் கொள்கையை செயற்படுத்துவதற்காக தேசிய தீர்வைக் கொள்கைக் குழு 2025 மே 15 அன்று நிறுவப்பட்டது.

சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியில் அதிகரிப்பு காரணமாக, பெற்றோலியப் பொருட்களின் மீதான உற்பத்தி வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானமானது அதிகரித்தது. சில திட்டங்களின் கீழான மோட்டார் வாகன இறக்குமதியின் விரிவாக்கம் காரணமாக மோட்டார் வாகனங்களிலிருந்தான மேம்பட்ட வருமானம் மற்றும் மதுவரி விகித திருத்தங்களின் தாக்கத்தை உணர்ந்ததன் மூலம் மதுபானங்கள் மீதான மதுவரியிலிருந்தான வருமான அதிகரிப்பு மற்றும் பணவீக்கத்திற்கு மது வரியை அட்டவணைப்படுத்தியமை ஆகியவை மதுவரி வருமானத்தில் பெருமளவில் பங்களித்தன.

2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீதமாக இருந்த வெளிநாட்டு வர்த்தக வரிகளிலிருந்து கிடைத்த வருமானமானது, துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL), விசேட வியாபார பண்ட அறவீடு (SCL), சுங்க இறக்குமதி தீர்வை (CID) மற்றும் பொருட்கள் ஏற்றுமதிகள் மானியத் திட்டம் (CESS) ஆகியவற்றின் பங்களிப்புகளுடன் 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. விசேட பண்ட அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் சிறப்பான செயலாற்றுகை வெளிப்படுத்தியது. 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டை 21.3 சதவீத புள்ளிகளால் விஞ்சுகின்ற வகையில், விசேட பண்ட அறவீட்டிலிருந்து கிடைத்த வருமானம், 2023 ஆம் ஆண்டில் ரூபா 51.3 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 124.4 சதவீதம் அதிகரித்து ரூபா 115.2 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்கு பிரதான காரணம், சீனி மற்றும் உருளைக்கிழங்கு மீதான வரி விகிதங்களில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தம், இறக்குமதி கட்டுப்பாடுகளில் தளர்வு, இலக்கிடப்பட்ட கொள்கை மாற்றங்கள் மற்றும் பொருளாதார மீட்சியுடன் அதிகரித்த கேள்வி ஆகியவை ஆகும்.

2024 ஆம் ஆண்டில் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களிலிருந்து இலாபம் மற்றும் பங்குலாபங்கள் ஆகியவற்றின் பெறுகை 46 சதவீதம் குறைந்ததன் காரணமாக, வரி அல்லாத வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 328.3 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 326.3 பில்லியனாக 0.6 சதவீதம் குறைவடைந்துள்ளது.

2.2 வரிக் கொள்கைச் சீர்திருத்தம்

2024 ஆம் ஆண்டில், 2023 ஆம் ஆண்டு சனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்த முக்கிய வருமான வரி சீர்திருத்தங்களின் முழு ஆண்டு வருமான தாக்கத்தை இலங்கை அனுபவித்தது. இச் சீர்திருத்தங்கள் வருமான உருவாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் நிதி ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட வரிக் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கின்றன. வரி அடிப்படையை விரிவுபடுத்துதல், தனிநபர் வருமான வரி வரம்புநிலை மற்றும் விகிதங்களைத் திருத்துதல் மற்றும் கடுமையான சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் ஆகியவை இம் மாற்றங்களில் உள்ளடங்கும். இதன் விளைவாக, மேம்பட்ட இணக்கப்பாட்டையும் முன்னைய ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கொள்கை சீராக்கங்களின் ஒட்டுமொத்த விளைவையும் பிரதிபலிக்கின்ற வகையில், 2024 ஆம் ஆண்டு வருமான வரி சேகரிப்பில் கணிசமான அதிகரிப்பு உரைப்பட்டது.

அட்டவணை 2.2 | முற்கூட்டிய வருமான வரி (AIT)/ பிடித்து வைத்தல் வரி (WHT)

வகை	விகிதம் (%)	இறுதியான / இறுதியல்லாத
பங்கிலாபம்	15	இறுதியான
செலுத்தப்பட்ட வட்டி அல்லது கழிப்பீடு	5	இறுதியல்லாத
மாதமொன்றிற்கு ரூபா 100,000 இற்கு மேம்பட்ட வாடகைக் கொடுப்பனவுகள்	10	இறுதியல்லாத
தொழில் வல்லுநர்கள் போன்ற தனியாட்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 இற்கு மேற்பட்ட சேவை	5	இறுதியல்லாத
ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும் வதிவோரல்லாதோர்	14	இறுதியல்லாத

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2023 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டில், பெறுமதிசேர் வரி, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு மற்றும் மதுவரிகளில் விரிவான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டது. பெரும்பாலான பெறுமதிசேர் வரி விலக்குகள் நீக்கப்பட்ட அதேவேளை, நிலையான பெறுமதிசேர் வரி விகிதம் 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. பெறுமதிசேர் வரிக்கான பதிவு வரம்புநிலை ஆண்டுக்கு ரூபா 80 மில்லியனில் இருந்து ரூபா 60 மில்லியனாகக் குறைக்கப்பட்டமையானது வரி அடிப்படையை கணிசமாக விரிவுபடுத்தியது. இதேபோன்று, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தொகைக்கான பதிவு வரம்புநிலை ஆண்டுக்கு ரூபா 120 மில்லியனில் இருந்து ரூபா 60 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. இதன் மூலம் வரிக்குட்படக்கூடிய நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருமான சாத்தியம் மேம்படுத்தப்பட்டது. மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் மீதான மதுவரி மற்றும் உற்பத்திவரி விகிதங்கள் பணவீக்கத்திற்கு ஏற்ப சீர்செய்யப்பட்டன.

2024 ஆம் ஆண்டு சனவரி 1 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட முழுமையான பெறுமதிசேர் வரி கொள்கைச் சீர்திருத்தங்கள் காரணமாக, 2024 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்தில் பெறுமதிசேர் வரி மிகப்பெரிய தனிப் பங்களிப்பாளராக உருவெடுத்தது. வரலாற்றில் முதன் முறையாக ரூபா 1 டிரில்லியனைத் தாண்டி வருமான வரி சேகரிப்பை விஞ்சும் வகையில் பெறுமதிசேர் வரியிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் 88.6 சதவீதம் அதிகரித்து ரூபா 1,309.7 பில்லியனாக உயர்ந்துள்ளது. இச் சீர்திருத்தங்கள் பெறுமதிசேர் வரி அடிப்படையை விரிவுபடுத்தியது மட்டுமல்லாமல் பெறுமதிசேர் வரி சேகரிப்பின் வினைத்திறனையும் மேம்படுத்தியுள்ளன.

பணவீக்க குறியீட்டை மையமாகக் கொண்டு உற்பத்திவரி மற்றும் மதுவரி சீர்திருத்தங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அனைத்து வகையான மதுபானங்கள் மீதான மதுவரிகளும்,

அட்டவணை 2-3 | மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் - 2024

ரூபா. மில்லியன்

விடயம்	மதிக்கப்பட்ட உண்மையான	உண்மையான(அ)	விலகல்
மொத்த வருமானம்	4,107,000	4,030,838	-76,161
வரி வருமானம்	3,820,000	3,704,577	-115,423
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்			
வருமானம், இலாபம் மீதான வரி	1,080,000	1,025,998	-54,002
பெ.சே.வரி - உள்நாட்டு (தேறிய)	740,000	712,187	-27,813
தேசக் கட்டுமான வரி (உள்நாட்டு)	-	130	130
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	195,000	186,477	-8,523
ஏனைய	9,443	13,043	3,600
உப மொத்தம்	**2,024,443**	**1,937,833**	**-86,609**
சுங்கத் திணைக்களம்			
இறக்குமதித் தீர்வை	175,000	111,147	-63,853
பெ.சே.வரி - இறக்குமதிகள் (தேறிய)	660,000	597,493	-62,507
தேசக் கட்டுமான வரி (இறக்குமதி)	-	8	8
சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (இறக்குமதி)	55,000	64,392	9,392
துறைமுக மற்றும் நிமானநிலைய அபிவிருத்தி அறவீடு	175,000	170,014	-4,986
செஸ் வரி	60,000	81,129	21,129
விசேட நுகர்வு அறவீடு மற்றும் ஏனை	95,200	115,667	20,467
உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்)			
சிகரெட்டுகள்	143,000	117,145	-25,855
பெற்றோலியம்	135,000	200,200	65,200
மோட்டார் வாகனங்கள் மற்றும் பிற	35,000	66,601	31,601
உப மொத்தம்	**1,533,200**	**1,523,794**	**-9,406**
மதுவரித் திணைக்களம்			
மதுபானம்/புகையிலை	232,000	214,584	-17,416
உப மொத்தம்	**232,000**	**214,584**	**-17,416**
ஏனையவை			
தொலைத்தொடர்பு அறவீடு	18,500	15,927	-2,573
உரிம வரி மற்றும் பிற	11,857	12,438	581
உப மொத்தம்	**30,357**	**28,366**	**-1,991**
வரியல்லாத வருமானம்	287,000	326,261	39,261

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

வருமான வரி

வருமான வரி வருமானம் 2023 இல் ரூபா 911.4 பில்லியனில் இருந்து 2024 இல் ரூபா 1,026.2 பில்லியனாக 12.6 சதவீதம் அதிகரித்துள்ளது. தேறிய வருமான வரி வருமானமானது 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 95.0 சதவீதமாக காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வருமான வரியானது 2023 இல் 3.3 சதவீதத்திலிருந்து 0.1 சதவீத புள்ளிகள் அதிகரித்து 2024 இல் 3.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. தனிநபர் மற்றும் நிறுவன வரிகளிலிருந்தான வருமனம் 2023 இல் ரூபா 753.2 பில்லியனில் இருந்து 2024 இல் ரூபா 862.2 பில்லியனாக 14.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு முக்கிய காரணம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 இல் உழைக்கும் போதான செலுத்துகையின் (PAYE) பெறுகை 36.3 சதவீதம் அதிகரித்து ரூபா 197.6 பில்லியனாகவும், நிறுவனம் அல்லாத வருமான பெறுகைகள் 65.8 சதவீதம் அதிகரித்து ரூபா 80.5 பில்லியனாகவும் அதிகரித்ததே ஆகும். 2023 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் தனிநபர் வருமான வரிக்கான வரி இல்லாத வரம்புநிலைய ஆண்டுக்கு ரூபா 3.0 மில்லியனில் இருந்து ரூபா 1.2 மில்லியனாகக் குறைத்ததன் மூலம் வரித் தளத்தை விரிவுபடுத்தியதன் தாக்கத்திலிருந்தான வருமான அதிகரிப்பை இது பிரதிபலிக்கிறது. வரி விதிக்கக்கூடிய வருமானத்தில் விருத்திமுறை வரி விகிதத்தை 18 சதவீதத்திலிருந்து 36 சதவீதமாக விரிவுபடுத்தியதும் மேற்கண்ட வருமான வளர்ச்சிக்கு சாதகமாக பங்களித்தது. பிடித்து வைத்தல் வரி (WHT) வருமானம் 2023 இல் ரூபா 157.9 பில்லியனில் இருந்து 2024 இல் ரூபா 163.8 பில்லியனாக 3.7 சதவீதம் அதிகரித்து, குறிப்பாக அந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் குறைந்த வட்டி விகிதம் காணப்பட்ட போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் 102.4 சதவீதமாக பதிவுசெய்தது. எவ்வாறிருப்பினும், காணி விற்பனை செயலாற்றுகையின் தேக்கநிலை காரணமாக, மூலதன ஏய்ப்பு வரியிலிருந்து ஈட்டப்பட்ட வருமானமானது 2023 ஆம் ஆண்டில் ரூபா 2.7 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 1.9 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது.

பெறுமதிசேர் வரி

பெயரளவு நியதிகளின் அடிப்படையில், பெறுமதிசேர் வரி வருமானம் ஆண்டுக்கு ஆண்டு 88.6 சதவீதமாக கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. இது 2023

பெற்றோல் மற்றும் டீசல் தவிர, அனைத்து வகையான மதுபானங்கள் மற்றும் அலகு விகிதங்களுடன் கூடிய ஏனைய உற்பத்தி வரிக்குட்படக் கூடிய அனைத்துப் பொருட்கள் மீதான உற்பத்திவரி மற்றும் மதுவரியானது 14 சதவீதம் அதிகரித்தது. இந் நடவடிக்கைகள் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப உற்பத்திவரி மற்றும் மதுவரி வருமானம் பேணப்படுவதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை, பரந்த நிதித் திரட்டு முயற்சிகளுக்கு பங்களிக்கின்றன. இவ் வரிக் கொள்கைச் சீர்திருத்தங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து 2024 ஆம் ஆண்டில் வலுவான வருமான செயலாற்றுகைக்கு ஆதரவளித்ததோடு நிலையான பொது நிதி முகாமைத்துவத்திற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பைக் குறித்துக்காட்டின.

2·3 அரசாங்க வருமான செயலாற்றுகை

மானியங்கள் உள்ளடங்கலாக மொத்த அரசாங்க வருமானமானது 2023 ஆம் ஆண்டில் ரூபா 3,074.3 பில்லியனில் இருந்து 33.1 சதவீதம் அதிகரித்து ரூபா 4,090.8 பில்லியனாக அதிகரித்துள்ளது. வரி அல்லாத வருமானத்தில் ஓரளவு குறைவு ஏற்பட்ட போதிலும், வரி வருமானம் 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,720.6 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 36.2 சதவிதம் அதிகரித்து ரூபா 3,704.6 பில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.9 சதவீதமாக காணப்பட்ட வரி வருமானம் 2024 ஆம் ஆண்டில் 2.5 சதவீதப் புள்ளிகள் அதிகரித்து 12.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு பிரதான காரணம், 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 சதவீதமாக இருந்த பெறுமதிசேர் வரியிலிருந்தான வருமானமானது 1.8 புள்ளிகள் அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.4 சதவீதமாக அதிகரித்தது. இது பெறுமதிசேர் வரி விகிதத்தின் அதிகரிப்புடன் பெறுமதிசேர் வரிக்கான பதிவு வரம்புநிலைக் குறைப்பு மற்றும் பெரும்பாலான விலக்களிப்புக்களின் நீக்கம் ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றது. பெயரளவு நியதிகளின் அடிப்படையில், பணவீக்கம் சீர்செய்யப்பட்ட குறியீட்டை நடைமுறைப்படுத்தியதன் மூலம் வரி விகிதங்கள் அதிகரித்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 469.6 பில்லியனாக இருந்த மதுவரி 27.4 சதவீதம் அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 598.5 பில்லியனாக அதிகரித்ததோடு, வரி இல்லாத வரம்புநிலை குறைக்கப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் ரூபா 216.2 பில்லியனாக இருந்த சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு தொகை 16.0 சதவீதம் அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 250.9 பில்லியனாகவும் அதிகரித்தது வரி வருமானத்தின் விரிவாக்கத்திற்கு கணிசமாகப் பங்களிப்புச் செய்துள்ளது. மேற்கண்ட வரிக் கொள்கை மாற்றங்களின் பயனாக, உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரிகளிலிருந்து வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 927.5 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,238.6 பில்லியனாக 33.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

வரைபு 2·1 | அரசாங்க வருமானம்



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வரைபு 2·2 | வரி வருமானத்தின் வகுதி - 2024



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் 165.1 சதவீதமும், வியாபாரப் பண்ட அறவீட்டு வருமானம் 124.4 சதவீதமும் அதிகரித்ததன் காரணமாக, இறக்குமதி அடிப்படையிலான வரிகளிலிருந்தான வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 842.2 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,398.1 பில்லியனாக கணிசமாக அதிகரித்து 66.0 சதவீதம் அதிகரித்துள்ளது.

வட்டி வருமானம் மற்றும் தண்டப்பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் ஆகியவற்றிலிருந்து வருமானம் அதிகரித்த போதிலும், இலாபங்கள் மற்றும் பங்குலாபங்களிலிருந்தான வருமானம் குறைந்ததன் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக, 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் வரி அல்லாத வருமானம் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு குறைந்துள்ளது.

அட்டவணை 2.5 | பெறுமதிசேர் வரி வருமானம்

ரூபா. மில்லியன்

விடயம்	2019	2020	2021	2022	2023	2024(a)
உள்நாட்டு	275,089	150,823	185,918	292,293	469,768	712,326
இறக்குமதிகள்	169,914	85,727	122,766	171,478	225,401	598,048
மொத்த வருமானம்	445,003	236,550	308,684	463,771	695,169	1,310,374
மீளளிப்புக்கள்	1,126	2,764	471	699	709	694
தேறிய வருமானம்	443,877	233,786	308,213	463,072	694,460	1,309,680
மொ.உ.உ.% இல் தேறிய வருமானம்	2.8	1.5	1.7	1.9	2.5	4.4

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(a) தற்காலிகமானது

அட்டவணை 2.6 | அரசாங்க வரி வருமானம் - வகைப்பாட்டு அடிப்படையில்

ரூபா. மில்லியன்

மூலம்	2023	2024(a)	2023/2024 மாற்றம் (%)
வருமான வரி	911,355	1,026,199	12.6
உள்நாட்டு நுகர்வு அடிப்படை வரிகள்	927,544	1,238,560	33.5
பெ.சே.வரி - உள்நாட்டு	469,107	712,187	51.8
தேச கட்டுமான வரி - உள்நாட்டு	68	130	90.3
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - உள்நாட்டு	164,915	186,477	13.1
மதுபானம் மீதான வரி	170,260	213,390	25.3
சிகரெட்டு அல்லது புகையிலை மீதான வரி	118,481	118,339	-0.1
ஏனையவை (உற்பத்தி)	4,713	8,039	70.6
இறக்குமதி அடிப்படை வரிகள்	842,164	1,398,143	66.0
இறக்குமதி வரிகள்	105,120	111,147	5.7
பெ.சே.வரி - இறக்குமதி	225,353	597,493	165.1
தே.க.வரி - இறக்குமதி	260	8	-97.1
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - இறக்குமதி	51,265	64,392	25.6
து.வி.நி.அ அறவீடு	175,486	170,014	-3.1
வி.வி. பண்ட அறவீடு	51,327	115,199	124.4
செஸ் வரி	57,184	81,129	41.9
பெற்றோலியம் உற்பத்தி	143,642	200,200	39.4
மோட்டார் வாகனங்கள் - உற்பத்தி	32,526	58,562	80.0
மோட்டார் வாகனங்கள் - உற்பத்தி	39,500	41,675	5.5
தொலைத்தொடர்பாடல் அறவீடு	17,304	15,927	-8.0
ஏனையவை	22,195	25,748	16.0
மொத்த வரி வருமானம்	2,720,563	3,704,577	36.2

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(a) தற்காலிகமானது

சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு

2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல், சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிற்கான கட்டாய பதிவுக்கான வரிக்குட்படத்தக்க வருமானப்புரள்வு வரம்புநிலை ஆண்டுக்கு ரூபா 120.0 மில்லியனில் இருந்து ஆண்டுக்கு ரூபா 60.0 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல், நடைமுறைக்கு வரும் வகையில், ஆண்டுக்கு ரூபா 60.0 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் கொண்ட இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து வரிக்குட்படத்தக்க வருமானப்புரள்வின் மீது 2.5 சதவீத விகிதத்தில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புத் தொகையானது வசூலிக்கப்படுகிறது. இந்தக் கொள்கை மாற்றம் அதிக வணிகங்களை வரியின் கீழ் கொண்டுவருவதன் மூலம் வரித்தளத்தை விரிவுபடுத்தியது. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிலிருந்தான வருமானமானது 2023 ஆம் ஆண்டின் ரூபா 216.2 பில்லியனில் இருந்து 2024 ஆண்டில் ரூபா 250.9 ஆக அதிகரித்தது. சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிற்கான பதிவிற்கான வரம்புநிலையின் கீழ்நோக்கிய மீள்சீரமைப்பு காரணமாக, 2023 ஆம் ஆண்டில் 8,107 ஆக இருந்த சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிற்காக பதிவுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் 12,097 ஆக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

அட்டவணை 2-4 | அரசாங்க வருமானம்

ரூபா. மில்லியன்

விடயம்	2020	2021	2022	2023	2024(அ)
வரி வருமானம்	1,216,542	1,298,019	1,751,132	2,720,563	3,704,577
வருமான வரி	268,249	302,115	534,021	911,355	1,026,199
பெ.சே.வரி	233,786	308,213	463,072	694,460	1,309,680
தே.க.வரி	2,351	434	413	328	137
உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி*	321,970	306,898	342,563	469,622	598,529
இறக்குமதித் தீர்வைகள்	114,183	64,339	50,009	105,120	111,147
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	115,442	154,125	180,595	175,486	170,014
விசேட நுகர்வு அறவீடு	82,709	55,828	40,194	51,327	115,199
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	-	-	36,111	216,181	250,869
ஏனையவை	77,852	106,067	104,154	96,683	122,804
வரியல்லாத வருமானம்	151,417	159,052	228,052	328,259	326,261
வட்டி / வாடகை	19,351	11,556	13,188	33,231	64,192
இலாபம் மற்றும் பங்கிலாபங்கள்	17,624	30,591	28,092	75,701	41,080
விற்பனை மற்றும் அறவீடுகள்	47,370	42,645	90,050	146,566	154,731
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	32,417	34,619	37,416	36,258	43,089
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	24,009	15,012	30,007	1,029	-
ஏனையவை	10,646	24,630	29,300	35,474	23,170
மொத்த வருமானம்	1,367,960	1,457,071	1,979,184	3,048,822	4,030,838
					மொ.உ.உ.%
வரி வருமானம்	7.8	7.4	7.3	9.9	12.4
வருமான வரி	1.7	1.7	2.2	3.3	3.4
பெ.சே.வரி	1.5	1.7	1.9	2.5	4.4
தே.க.வரி	...	...	...	...	...
உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரி*	2.1	1.7	1.4	1.7	2.0
இறக்குமதித் தீர்வைகள்	0.7	0.4	0.2	0.4	0.4
துறைமுக மற்றும் விமானநிலைய அறவீடு	0.7	0.9	0.8	0.6	0.6
விசேட வியாபாரப் பண்ட அறவீடு	0.5	0.3	0.2	0.2	0.4
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	-	-	0.2	0.8	0.8
ஏனையவை	0.5	0.6	0.4	0.4	0.4
வரியல்லா வருமானம்	1.0	0.9	0.9	1.2	1.1
வட்டி / வாடகை	0.1	0.1	0.1	0.1	0.2
இலாபம் மற்றும் பங்கிலாபங்கள்	0.1	0.2	0.1	0.3	0.1
விற்பனை மற்றும் அறவீடுகள்	0.3	0.2	0.4	0.5	0.5
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	0.2	0.2	0.2	0.1	0.1
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	0.2	0.1	0.1	...	...
ஏனையவை	0.1	0.1	0.1	0.1	0.1
மொத்த வருமானம்	8.7	8.3	8.2	11.1	13.5

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது
... புறக்கணிக்கத்தக்கது
- தகவல் இல்லை
* புகையிலை வரி உற்பத்தி தீர்வை மற்றும் மதுவரியில் உள்ளடக்கப்பட்டுள்ளது

ஆம் ஆண்டில் ரூபா 694.5 பில்லியனில் இருந்து 2024 இல் ரூபா 1,309.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகள் ஆகிய இரண்டிலிருந்துமான பெறுமதிசேர் வரிச் சேகரிப்புக்களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காரணமாக இந்த கணிசமான வளர்ச்சி உந்தப்பட்டது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானமானது 2023 ஆம் ஆண்டின் ரூபா 469.1 பில்லியனிலிருந்து 51.8 சதவீதத்தினால் அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 712.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரி வருமானம் 2023 ஆம் ஆண்டின் ரூபா 225.4 பில்லியனில் இருந்து 165.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 597.5 பில்லியனாக அதிகரித்துள்ளது. பெறுமதிசேர் வரியிலிருந்து இத்தகைய கணிசமான ஈட்டுகை இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டின் பெரும்பகுதி முழுவதும பெரும்பாலான இறக்குமதி கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தமையினால் இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரியின் முழு வருவாய் சாத்தியமும் முழுமையாக உணரப்படவில்லை.

வரி நிர்வாகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களானவை பெறுமதிசேர் வரி இணக்கத்தை மேம்படுத்த உதவியுள்ளது. நிதியியல் சேவைத் துறையில் உள்ளவை அடங்கலாக பெறுமதிசேர் வரிக்கு பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, 2023 ஆம் ஆண்டின் 14,128 இலிருந்து 2024 ஆம் ஆண்டில் 21,542 ஆக 52.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வரி அடிப்படையை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் காரணமாக 2025 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தின் இறுதிக்குள், பதிவுசெய்யப்பட்ட பெறுமதிசேர் வரி செலுத்துவோரின் எண்ணிக்கை மேலும் 22,043 ஆக அதிகரித்துள்ளது. இந்த முன்னேற்றங்களின் பயனாக, மொத்த வரி வருமானத்தின் பங்காக பெறுமதிசேர் வரியானது 38.8 சதவீத புள்ளிகள் அதிகரித்து, 2023 ஆம் ஆண்டில் 25.5 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் மொத்த வரி வருமானத்தில் 35.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. பெறுமதிசேர் வரி வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, 2023 ஆம் ஆண்டில் 2.5 சதவீதத்திலிருந்து 2024 இல் 4.4 சதவீதமாக கணிசமாக அதிகரித்துள்ளது. இது நிதித் திரட்டல் முயற்சிகளில் பெறுமதிசேர் வரியின் வளர்ந்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

கட்டம் உ.3 | இலங்கையில் மோட்டார் வாகன இறக்குமதியை மீள ஆரம்பித்தல்

ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் சிறப்பு நோக்க வாகனங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியதன் மூலம் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீள ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2025 ஜனவரி 27 ஆம் திகதி முதல் வணிக வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளும், 2025 ஜனவரி 31 ஆம் திகதியிலிருந்து தனிப்பட்ட வாகனங்கள் உட்பட அனைத்து வகை வாகனங்களுக்குமான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து விதிக்கப்பட்ட மோட்டார் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள், நாட்டின் கடுமையான சென்மதி நிலுவை நெருக்கடியை நிர்வகிப்பதற்கும் வெளிவாரித் துறை அதிர்ச்சிக்கு மத்தியில் அந்நியச் செலாவணி இருப்புகளைப் பேணுவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகால நடவடிக்கைச் செயற்பாடுகளின் ஒரு பகுதியாகும்.

வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தீர்மானமானது, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் முன்னேற்றங்கள், வர்த்தக பற்றாக்குறைப் போக்கின் சுருக்கம், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவிலான விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிலையான முன்னேற்றம் உள்ளிட்ட பேரின பொருளாதார உறுதிப்பாட்டின் அறிகுறிகளால் ஆதரிக்கப்பட்டது. மேலும் வெளிவாரித் துறைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை உணர்ந்து, அதனுடன் தொடர்புடைய சாத்தியமான இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக படிப்படியான மற்றும் இறுக்கமான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட அணுகுமுறையை அரசாங்கம் பின்பற்றியது.

வாகன இறக்குமதித் தடை நீக்கப்பட்டமையானது, நாட்டின் அலுவல்சார் ஒதுக்கு நிலை குறித்த எச்சரிக்கையான அணுகுமுறையுடன் 2025 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன இறக்குமதிகளிலிருந்து வரி வருமானமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 1.3 சதவீதத்தைத் திரட்டும் அரசாங்கத்தின் அரசிறை நோக்கத்தின் மூலோபாய திட்டத்துடன் இணைந்திருந்தது.

இந்த வருமான நோக்கினை ஆதரிப்பதற்காக, பின்வரும் தொடர்ச்சியான அரசிறை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன:

மோட்டார் வாகனங்களுக்கான அலகு வீத அடிப்படையில் (ரூபாய் அடிப்படையில்) அறவிடப்படும் உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்), 2025 ஜனவரி 11 முதல் அமுலுக்கு வரும் வகையில் பணவீக்க-சரிசெய்யப்பட்ட குறியீட்டுமுறையின் அடிப்படையில் 5.9 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது

- மோட்டார் வாகனங்கள் மீது 20 சதவீத சுங்க இறக்குமதித் தீர்வை விதிக்கப்பட்டதுடன், சுங்க இறக்குமதித் தீர்வை மீது 50 சதவீத மிகைக் கட்டணமும் விதிக்கப்பட்டது, இதன் விளைவாக 2025 பெப்ரவரி 1 ஆம் திகதியிலிருந்து ஒருங்கிணைந்த 30 சதவீத சுங்கத்தீர்வை விதிக்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி வரம்பு, 2025 பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் மின்சார வாகனங்கள் தவிர்ந்த ஒவ்வொரு எரிபொருள் அடிப்படையிலான வாகன வகைக்கும் ரூபா 1.5 மில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- மின்சார வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை பெப்ரவரி 1, 2025 முதல் இரட்டிப்பாக்கப்பட்ட அதே வேளை சுற்றுச்சூழல் ரீதியாக நிலைபேறான போக்குவரத்து தீர்வுகளை தொடர்ந்தும் ஆதரிக்க மின்சார வாகனங்கள் மீதான ஒட்டுமொத்த வரிச்சுமை உள் எரிப்பு இயந்திர (ICE) வாகனங்களை விட குறைவாகவே தொடர்ந்தும் பேணப்படுகின்றது.
- இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்ட 90 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதோடு இனைக்கமின்மைக்கு மாதத்திற்கு செலவு, காப்புறுதி மற்றும் கொண்டு செல்லற் செலவின் (CIF) பெறுமதியில் 3 சதவீதம் அபராதம் விதிக்கப்படுவதுடன், இது 45 சதவீதம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இணக்கம் மற்றும் தடமறிதலை வலுப்படுத்த மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு வரி செலுத்துனர் அடையாள எண் (TIN) கட்டாயமாகும்

உற்பத்திவரி மற்றும் மது வரி

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் உற்பத்திவரி மற்றும் மதுவரியிலிருந்தான மொத்த வருமானம் 27.4 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது, இது பல முக்கிய உற்பத்திவரி மற்றும் மதுவரி வகைகளில் வலுவான செயல்திறனை பிரதிபலிக்கிறது. இந்த அதிகரிப்பு பெருமளவில் மதுபானம், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகனங்களிலிருந்து அதிக வருமான சேகரிப்புக்களால் உந்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட உற்பத்திவரி மற்றும் மதுவரி வீத திருத்தங்களின் முழு ஆண்டுத் தாக்கம் மற்றும் 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் உற்பத்திவரி மற்றும் மதுவரி பொருட்களுக்கான பணவீக்கம் சீர்செய்யப்பட்ட குறியீட்டு முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம் இது ஆதரவளிக்கப்பட்டது.

பெற்றோலியப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 39.4 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்து, 2023 ஆம் ஆண்டில் ரூபா 143.6 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 200.2 பில்லியனாக ஆதிகரித்துள்ளது. இந்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது, 2023 ஆம் ஆண்டில் வரி விகித திருத்தங்களின் முழுத் தாக்கம் மற்றும் குறிப்பிட்ட காலகட்டத்தில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பு என்பவற்றினால் ஏற்பட்டதாகும்.

அதேவேளை, இனிப்பு ட" னங்கள், குளிர்சாதன பெட்டிகள், பாம் எண்ணெய் மற்றும் கொழுப்பு அமிலங்கள் உள்ளிட்ட ஏனைய உற்பத்தி வரிக்குட்டபட்ட பொருட்களின் மீதான வருமானம் 70.6 சதவீதத்தால் சரியாக அதிகரித்து, 2023 ஆம் ஆண்டின் ரூபா 4.7 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2024 இல் ரூபா 8.0 பில்லியனை எட்டியது. அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் முழுமையாக நீக்கப்பட்டமை மற்றும் 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் உற்பத்திவரிக்குட்படக்கூடிய பொருட்களுக்கான பணவீக்கம் சீர்செய்யப்பட்ட குறியீட்டைப் பயன்படுத்தியமை போன்றவற்றினால் இந்த வளர்ச்சியானது பெருமளவில் ஏற்பட்டது. 2024 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட ஆண்டு மதிப்பீட்டு வருமானத்தின் 109.8 சதவீதத்தை அடைந்ததன் மூலம் அரசாங்க வருமானத்தின் மூன்றாவது பெரிய பங்களிப்பாளராக உற்பத்திவரி மற்றும் மதுவரி தனது நிலையை உறுதி செய்தது.

மதுபானங்கள் மீதான மதுவரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 170.3 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 213.4 பில்லியனாக கணிசமாக அதிகரித்து மொத்த மதுவரி வருமானத்தில் 35.7 சதவீதமாக பங்களித்திருக்கின்றது. மதுவரிகளின் பணவீக்க குறியீட்டு கொள்கையின்படி, 2024 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி முதல் மதுபானங்கள் மீதான கலால் வரிகள் 14.0 சதவீதத்தினால் அதிகரித்தன. 2024 ஆம் ஆண்டில் மதுபானங்கள் மீதான வரிகளிலிருந்தான தேறிய வருமானம் 92.8 சதவீதமாக இருந்தது.

அட்டவணை 2.7 | உற்பத்தி தீர்வை மற்றும் மதுபான வரி வருமானம்

ரூபா. மில்லியன்

விடயம்	2019	2020	2021	2022	2023	2024(ம)
மதுபானம்	115,443	120,990	138,637	165,188	170,260	213,390
சிகரெட்	87,400	94,383	88,576	104,200	118,481	118,339
மோட்டார் வாகனம்	130,378	48,760	18,113	14,504	32,526	58,562
பெற்றோலிய உற்பத்திகள்	61,740	53,111	55,339	53,074	143,642	200,200
ஏனைய	4,549	4,727	6,234	5,598	4,713	8,039
மொத்தம்	**399,511**	**321,970**	**306,898**	**342,563**	**469,622**	**598,529**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(ம) தற்காலிகமானது

எவ்வாறெனினும், சிகரெட்டுகளின் மூலமான வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 117.5 பில்லியனில் இருந்து 2024 இல் ரூபா 117.1 பில்லியனாக 0.3 சதவீதத்தால் சற்றுக் குறைவடைந்துள்ளது. இந்த சரிவானது விற்பனை அளவின் சுருக்கம் அல்லது நான்கு அடுக்கு சிகரெட்டுகளுக்கு இடையிலான நுகர்வு நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்களால் ஏற்பட்டது. மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தி வரியிலிருந்து கிடைக்கும் வருமானம் 80.0 சதவீதம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்து, 2023 ஆம் ஆண்டில் ரூபா 32.5 பில்லியனில் இருந்து 2024 இல் ரூ.58.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சியானது பெரும்பான்மையாக சிலவகை மோட்டார் வாகனங்கள் மற்றும் குறிப்பிட்ட துறைகளுக்கான தற்காலிக இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதன் மூலம் உந்தப்பட்டது.

வரைபு 2.3 | சிகரெட் விற்பனை மற்றும் உற்பத்தித் தீர்வை வருமானம்



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம்

அட்டவணை 2.3 | மதுபானம் மற்றும் சிகரெட்டுகள் விற்பனை / உற்பத்தியிலிருந்தான உற்பத்தித் தீர்வை / மதுவரி சேகரிப்பு

ஆண்டு	உற்பத்தி / விற்பனை செய்யப்பட்ட அளவு						உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி வருமானம்			
	வன் மதுபானம் (லீற்றர் மில்.)	% மாற்றம்	மாவூறல் மதுபானம் (லீற்றர் மில்.)	% மாற்றம்	சிகரெட் (கூறுகளின் எண். மில்)	% மாற்றம்	மதுபானம் (ருபா.பில்)	% மாற்றம்	சிகரெட் (ருபா.பில்)	% மாற்றம்
2014	43.9	-0.6	124.5	3.6	3,777	-6.4	69.1	4.6	57.2	-2.3
2015	51.8	17.9	125.8	1.0	4,116	9.0	105.9	53.3	80.0	39.9
2016	55.6	7.3	52.2	-58.5	3,789	-7.9	120.8	14.1	88.8	11.0
2017	46.9	-15.5	71.1	36.3	3,149	-16.9	113.7	-5.9	86.0	-3.2
2018	25.3 [a]	-46.1	11.4 [a]	-84.0	3,150	0.0	113.9	0.2	92.2	7.2
2019	24.7	-2.4	19.1	67.9	2,622	-16.8	115.4	1.3	87.4	-5.2
2020	22.0	-10.9	11.4	-40.4	2,287	-12.8	121.0	4.9	94.3	8.0
2021	25.0	13.6	12.5	9.6	2,384	4.3	138.6	14.6	88.5	-6.2
2022	27.0	8.0	14.1	12.8	2,825	18.5	165.2	19.2	104.2	17.6
2023	20.4	-24.3	13.6	-3.5	2,303	-18.5	170.3	3.1	117.5	12.8
2024	19.2	-5.8	14.2	4.9	1,923	-16.5	213.4	25.3	117.1	-0.3

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்
[a] 2017 இன் பிறகு வன்மதுபான மற்றும் மாவூறல் மதுபானம் நிகர எடையில்

வரைபு .4 | மதுபான உற்பத்தி மற்றும் மதுவரி வருமானம்



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்

எவ்வாறெனினும், 2023 ஆம் ஆண்டில் 34.0 மில்லியன் முழுமையான லிட்டராக இருந்த மதுபான உற்பத்தி, 2024 ஆம் ஆண்டில் 1.2 சதவீதத்தினால் விளிம்புநிலையில் குறைவடைந்து 33.6 மில்லியன் முழுமையான லிட்டராகக் குறைவடைந்தது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் திகதி முதல் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் முகாமைத்துவ முறைமை போன்றவை (வரி முத்திரைகள்) உரிமம் பெற்ற உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் முழுமையாக செயற்படுத்தப்பட்டது. எனினும், நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் போலி ஒட்டுக்கள் (Stickers)

அட்டவணை 2.9 | மதுபானத்தின் மீதான மதுவரியின் திருத்தங்களின் அமைப்பு முறை

மதுபான வகைகள்	முந்திய தீர்வை ஒரு லீற்றருக்கு (ருபா) (2024.01.01 முதல்)	புதிய தீர்வை ஒரு லீற்றருக்கு (ருபா) (2025.01.11 முதல்)
விசேட சாராயம்	6,840	7,244
கரும்புச் சக்கைகள் / பனை / தென்னை சாராயம்	7,320	7,752
உள்நாட்டில் தயாரிக்கும் வெளிநாட்டு சாராயம்	7,525	7,969
பியர் (செறிவு - 5% குறைந்தது)	5,415	5,735
செறிவு கூடிய பியர் (செறிவு - சமனானது/5%ற்கு கூடியது)	5,680	6,015
வைன்	5,415	5,735
ரேக்	1,480	1,567
மில்க் பஞ்ச் மதுபானம்	3,760	3,982
சைடர் மதுபானம்	4,105	4,347

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது மதிப்பிடப்பட்ட வருமானத்தை ஓரளவிற்கு குறைவடையச் செய்துள்ளது. இருப்பினும், மதுவரித் திணைக்களத்திற்கான வருமான நிர்வாக முறைமையை (RASED) செயல்படுத்துவதன் மூலம் மதுவரித் திணைக்களத்தின் எண்ணியமயமாக்கல் (Digitalization) முன்னேற்றமடைந்து வருகின்றது.

சுங்க இறக்குமதித் தீர்வை

பிரதானமாக, அதிகம் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டில் ரூபா 105.1 பில்லியனாக இருந்த சுங்க இறக்குமதி தீர்வை (CID) வருமானம் 5.7 சதவீதத்தினால் அதிகரித்து 2024

கட்டம் 2•3 | இலங்கையில் மோட்டார் வாகன இறக்குமதியை மீள ஆரம்பித்தல் தொடர்ச்சி...

இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களுக்கு ஏற்புடையதான தற்போதைய வரிக் கட்டமைப்பானது, வருமானத்தைத் திரட்டுவதற்கான பரந்த கொள்கை நோக்கங்களுடன் வடிவமைக்கப்பட்ட வரிகள் மற்றும் வரிகளின் கலவையை உள்ளடக்கியுள்ளது. முக்கிய வரிகள் பின்வருமாறு:

- உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்)
- சுங்க இறக்குமதித் தீர்வை 20 சதவீதம்
- குறிப்பிட்ட வரி வரம்பு எல்லைகளை மீறும் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி (எரிபொருள் வகையைப் பொறுத்து மாறுபடும்)
- பெறுமதி சேர் வரி 18 சதவீதம்
- சுங்க இறக்குமதித் தீர்வை மீது 50 சதவீத சுங்க மிகைக்கட்டணம்
- வாகன உரித்துடைமை அறவீடு (ஏற்புடைய வகையினங்கள் தொடர்பாக)
- உற்பத்தித் (விசேட ஏற்பாடுகள்) தீர்வைக்கு உட்படாத வாகனங்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாக துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL)

2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, மோட்டார் வாகனங்கள் மீதான வரிகள் உற்பத்தித் தீர்வையின் கீழ் மாத்திரம் நிர்வகிக்கப்பட்டன. வரிச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து, வரிக்கட்டமைப்பு பல கூறுகளாக பிரிக்கப்பட்டது. இருப்பினும், மோட்டார் வாகன இறக்குமதிகளிலிருந்து பெறப்படும் பிரதான வருவான மூலமாக உற்பத்தித் தீர்வையே உள்ளது.

மோட்டார் கார் இறக்குமதிகளின் ஒப்பீடு : 2015-2019 பெப்ரவரி-மே காலப்பகுதிக்கு எதிராக 2025 - பெப்ரவரி-மே காலப்பகுதி



இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவின் பிரகாரம், 2024 டிசம்பர் 18 ஆம் திகதி முதல் 2025 ஜுன் 3 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 14,047 மோட்டார் கார்கள் உட்பட மொத்தம் சுமார் 49,541 மோட்டார் வாகனங்கள் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டதன் மூலம் அரசாங்க வரி வருமானத்திற்கு 149.1 பில்லியன் ரூபா பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. இது வருமானம் திரட்டுவதில் வலுவான செயல்திறனை பிரதிபலிப்பதுடன் மோட்டார் வாகன இறக்குமதி மூலம் வருடாந்திர வருமான மதிப்பீட்டு இலக்குகளை அடைய அரசு சரியான பாதையில் உள்ளது என்பதைக் குறிப்பிடுசெய்கின்றது

மோட்டார் வாகன இறக்குமதியை மீள ஆரம்பிப்பது, பொருளாதார நடவடிக்கைகளை புத்துயிரூட்டுதல், போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அரசாங்க வருமானத்தை வலுப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை கவனமாக சமநிலைப்படுத்தி, விவேகமான வெளிவாரித் துறை முகாமைத்துவத்தைப் பேணுகின்ற அதேவேளை, அளவிடப்பட்ட கொள்கை மாற்றமொன்றைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிலைபேறான மீட்சியை நோக்கிய இலங்கையின் தற்போதைய பயணத்திற்கு இந்த அணுகுமுறை ஆதரவளிக்கிறது.

கட்டம் 2.4 | வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமைக் கருத்திட்டம்

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதி ஒப்பந்தத்தில் (WTO-TFA) கையொப்பமிட்ட இலங்கையானது, "சி" வகை உறுதிப்பாட்டின் கீழ் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமைக் கருத்திட்டத்தை செயற்படுத்த ஒப்புக்கொண்டுள்ளது. வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை, அனைத்து ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் நிறுவனங்களை ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஒரே தளத்திற்குள் கொண்டு வருவதன் மூலமும், எல்லை வர்த்தகத்தில் (இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் பரிமாற்றங்கள்) ஈடுபடும் வர்த்தகர்களுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் ஒரே நுழைவுப் புள்ளி சமர்ப்பிக்க உதவுவதன் மூலமும், அதே தளத்தின் மூலம் தானாகவே இறுதி முடிவுகளை சரியான நேரத்தில் வர்த்தகருக்கு வழங்குவதன் மூலமும் சர்வதேச வர்த்தக ஒட்டங்களை எளிதாக்குகிறது.

இலங்கையில் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர கருத்திட்டத்திற்கான வரைபடம் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் உலக வங்கியால் உருவாக்கப்பட்டது. இருப்பினும், இந்த அறிக்கை 2022 இல் நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, 2022 ஜுன் 20 அன்று அமைச்சரவை இந்த திட்டத்தை மூன்று (3) நிலைகள் மூலம் செயல்படுத்த ஒப்புதல் அளித்தது. அதாவது ஆரம்ப நிலை, செயற்படுத்தல் நிலை மற்றும் செயற்பாட்டு நிலை என்பனவாகும். அமைச்சரவை ஒப்புதல் அளித்தபடி, கொள்கை அளவிலான முடிவுகளை எடுக்க திறைசேரி செயலாளர் தலைமையிலான உயர் மட்ட வழிகாட்டுதல் குழு, தொழில்நுட்ப அளவிலான முடிவுகளை எடுக்க திறைசேரியின் பிரதிச் செயலாளர் தலைமையிலான திட்டச் செயற்படுத்தல் குழு அமைக்கப்பட்டது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது, திரட்டு நிதியிலிருந்து வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் கீழ் ஒட்டுமொத்த கருத்திட்ட செயற்படுத்தலுக்குப் பொறுப்பான ஒரு பிரத்யேக கருத்திட்ட செயல்படுத்தல் பிரிவை (Project Implementation Unit -PIU) நிறுவுவதன் மூலம் கருத்திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கியுள்ளதுடன் 36 மாதங்களுக்குள் கருத்திட்டத்தை நிறைவுசெய்வதற்கான நேர இலக்குகளை நிர்ணயித்துள்ளது. 2024 அக்டோபர் முதல் பிரத்தியேக கருத்திட்ட செயற்படுத்தல் பிரிவை ஆரம்ப கட்டத்தில் செயல்படுத்தத் தொடங்கியதுடன், இப்போது அது செயல்படுத்தும் கட்டத்தை எட்டியுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது, நிதியுதவி பெறுவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மூலம் சாத்தியமான வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அங்கு சில வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் கருத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட சில முக்கியமான பணி தொகுப்புகளுக்கு தொழில்நுட்ப உதவியை வழங்க ஒப்புக்கொண்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் கருத்திட்டத்தை ஆதரிப்பதற்கு ஒப்புக்கொண்டபடி, கருத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது தேவைப்படும் தொழில்நுட்ப உதவி குறித்த நோக்கெல்லை ஆய்வொன்றினை அவர்கள் தொடங்கியுள்ளனர், மேலும் இலங்கை சூழலுக்கு ஏற்ற ஒற்றைச் சாளர முறைமை மாதிரி குறித்த பரிந்துரைகளை முன்மொழிய ஆய்வொன்றினை மேலும் தொடங்கியுள்ளனர். இரண்டு அறிக்கைகளும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவி மூலம் பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில், இலங்கை சூழலுக்கு ஏற்றவாறு பொருத்தமான ஒற்றைச் சாளர அமைப்பு கொள்வனவு செய்யப்பட்டு மேம்படுத்தப்படும் / உருவாக்கப்படும். அங்கு முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 நிறுவனங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு (06) எல்லை வர்த்தக ஒழுங்குமுறை நிறுவனங்கள் ஒற்றைச் சாளர மைய அமைப்பில் முன்னோடி சோதனையாக ஒருங்கிணைக்கப்படும். இருப்புநிலை 2027 ஆம் ஆண்டளவில் மைய அமைப்புடன் ஒருங்கிணைக்கப்படுவதுடன், 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 18 எல்லை வர்த்தக ஒழுங்குமுறை நிறுவனங்களை (Border Trade Regulatory Agencies) ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம் கருத்திட்டத்தின் செயல்படுத்தலை நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு இணையாக, தேவையான அனைத்து சட்ட உட்கட்டமைப்புகளும் நடைமுறையில் இருப்பதுடன், இதில் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவதற்கான ஒற்றை விரிவான சட்டம் அடங்கும்.

ஆம் ஆண்டில் ரூபா 111.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டு மார்த்து 29 ஆம் திகதி முதல் சுங்க இறக்குமதி தீர்வை விகிதங்களில் மேல்நோக்கிய சீராக்கத்தை ஏறபடுத்தி தீர்வை விகித்ததை 0, 10, 15 சதவீதங்களிலிருந்து 0, 15, 20 சதவீதங்களாக அதிகரித்ததன் மூலம், சுங்க இறக்குமதி தீர்வை வருமானத்தின் வளர்ச்சிக்கு பங்களித்தது. இது காப்பு வரிகளை படிப்படியாக நீக்குவதற்கான முன்மொழிவின் ஒரு பகுதியாகும். சுங்க இறக்குமதி தீர்வையிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டு வருமானம் ரூபா 175 பில்லியனில் 63.5 சதவீதமாகும். சீனி அல்லது பிற இனிப்புப் பொருட்கள் சேர்க்கப்படாத பால் மற்றும் கிரீம், கோதுமை மற்றும் 95 ஒக்டேன் மசகு அடங்கிய பெட்ரோல் ஆகியவற்றிலிருந்து மிக உயர்ந்த அளவிலான சுங்க இறக்குமதி தீர்வை சேகரிக்கப்பட்டது.

விசேட வியாபாரப் பண்ட அறவீடு

சீனி, கோதுமை தானியங்கள் மற்றும் மசகு எண்ணெய்கள் போன்ற அத்தியாவசிய இறக்குமதி பொருட்களின் இறக்குமதியளவில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக, விசேட வியாபாரப் பண்ட அறவீடு மூலமான வருமான சேகரிப்பு 2023 ஆம் ஆண்டில் ரூபா 51.3 பில்லியனில் இருந்து 124.4 சதவீதத்தினால் அதிகரித்து 2024 இல் ரூபா 115.2 பில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இது வருடாந்த மதிப்பீட்டின் ரூபா 95.0 பில்லியனில் 121.3 சதவீத அடைவு சாதனையாகும்.

துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு

2023 ஆம் ஆண்டில் ரூபா 175.5 பில்லியனாக இருந்த துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 2024 ஆம் ஆண்டில் 3.1 சதவீத விளிம்புநிலையினால் ரூபா 170.0 பில்லியனாகக் குறைவடைந்தது. இத்தகைய குறைவுக்கு உலக வங்கி ஆதரவளித்த அபிவிருத்திக் கொள்கை கடன் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2023 ஆம் ஆண்டு ஏப்பிரல் 3 ஆம் திகதி முதல் 1,631 HS குறியீடுகள் (கட்டணப் பொருட்கள்) மீதான துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு நீக்கப்பட்டதும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோல், டீசல், உரங்கள் போன்ற முக்கிய 26 பொருட்களுக்கு விலக்களிப்புச் செய்யப்பட்டதும் முக்கிய காரணமாகும். 2023 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டு காலத்திற்கு சம தவணைகளில் துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டினை முற்றிலுமாக ஒழிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், முன்னர் துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டிற்குட்டபட்ட மொத்தப் பொருட்களில் சுமார் 50 சதவீதத்தைக் குறிக்கும் அண்ணளவாக 4,100 HS குறியீடு பொருட்கள் விலக்கு அளிக்கப்பட்டன, இது வரி விதிக்கக்கூடிய இறக்குமதித் தளத்தைக் கணிசமாகக் குறைத்தது. 2024 ஆம் ஆண்டில் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் கீழ் பெரும்பான்மை வருமானத்தை ஈட்டும் பொருட்கள் பின்வருமாறு: இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், மின் உபகரணங்கள், பிளாஸ்டிக் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இரும்பு மற்றும் கறையில் இரும்பு பொருட்கள்.

பொருட்கள் ஏற்றுமதிகள் மானியத் திட்ட அறவீடு

செஸ் வரியிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம், 2023 ஆம் ஆண்டில் ரூபா 57.2 பில்லியனில் இருந்து 41.9 சதவீதத்தினால் அதிகரித்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 81.1 பில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பிற்கு, அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கொள்கைகளை நீக்கியதன் விளைவாக அதிகரித்த இறக்குமதியும் அத்துடன் 2023 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டு காலத்திற்குள் செஸ் (காப்பு வரி) இனை படிப்படியாக நீக்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானமும்

அட்டவணை .10 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம் மற்றும் விவசாயத்துறை அபிவிருத்திக்கான அரசாங்க மானியம் : 2022-2024

ரூபா. மில்லியன்

விபரம்	2022	2023	2024(அ)	விபரம்	2022	2023	2024(அ)
ஏற்றுமதிகளின் மீதான செஸ்வரி	**2,243**	**2,229**	**1,996**	**வர்த்தகப் பயிர் அபிவிருத்தி**	**64,074**	**56,008**	**41,517**
தேயிலை - தேயிலை (வரியும் ஏற்றுமதிக் கட்டுப்பாடும்) இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் என்பவற்றின் கீழ்	465	523	415	தேயிலை	462	686	499
இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானியச் சட்டத்தின் கீழ்	10	7	11	இறப்பர்	652	655	514
தெங்கு - தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	189	186	213	தெங்கு	213	450	500
ஏ.அ.ச. செஸ் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	1,579	1,513	1,357	மரமுந்திரிகை	29	47	55
இறக்குமதிகள் மீதான செஸ் வரி	**68,076**	**54,955**	**79,133**	சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (கறுவா, கொக்கோ, கோப்பி, மிளகு)	241	388	370
இறக்குமதிகள் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்	68,076	54,955	79,133	மொத்த விவசாயத்துறை அபிவிருத்திக்கான உர மானியம்	62,477	53,782	39,579
மொத்தம்	**70,318**	**57,184**	**81,129**	மொத்தம்	**64,074**	**56,008**	**41,517**

மூலம் : இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

கட்டம் .5 | சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் வர்த்தக வசதி தொடர்ச்சி...

இரண்டாவது வர்த்தக பேச்சுவார்த்தை (TNC) கூட்டம் 2024 ஜூலை 15 முதல் 16 வரை கொழும்பில் நடைபெற்றதுடன், இந்த பேச்சுவார்த்தைச் சுற்றின் போது இரு தரப்பினரும் இந்த நடைமுறையை ஒப்புக்கொண்டனர். இந்த இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான முன்மொழியப்பட்ட முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்திற்கான ஒப்புக்கொள்ளப்பட்ட தயாரிப்புகளின் பட்டியலிலுள்ள தீர்வைகளை நீக்குதல் அல்லது குறைப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.

- பங்களாதேஷ் இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்

2அப்போதைய வர்த்தக அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 21/1011/313/034 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில், முன்மொழியப்பட்ட இலங்கை - பங்களாதேஷ் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்க 2021 ஜூன் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பான 03 ஆவது சுற்று பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. 100 இயைபு முறைக் குறியீடுகள் தொடர்பான பொருட்களின் பட்டியல் பரிமாறப்பட்டது. ஆனால் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

4 ஆவது சுற்று பேச்சுவார்த்தைகள் 2024 மே 9 மற்றும் 10 அன்று திட்டமிடப்பட்டிருந்தாலும், அந்த நேரத்தில் பங்களாதேஷில் நிலவிய சூழ்நிலைகள் காரணமாக அது நடத்தப்படவில்லை. மேலும் 04 ஆவது சுற்று பேச்சுவார்த்தைகளைத் தொடங்க இரு நாடுகளும் இன்னும் ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லை.

- மலேசியா இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

2024 மே 31 அன்று அதிமேதகு சனாதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 24/1074/601/069 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் முன்மொழியப்பட்ட இலங்கை - மலேசியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்க 2024 ஜூன் 11 அன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இருப்பினும், பேச்சுவார்த்தைகளைத் தொடங்க இரு நாடுகளும் இன்னும் ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லை.

பொருட்கள் வர்த்தகத்திற்கான பேச்சுவார்த்தை சுற்றுகள் நிதி அமைச்சினால் ஏனைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டன. அங்கு வர்த்தக சமூகங்கள், சபைகள் மற்றும் தொழில்கள் போன்றவற்றுடன் வெளிப்புற ஆலோசனைகள் போதுமான அளவு செய்யப்பட்டு பேச்சுவார்த்தைகளுக்கு அவர்களின் பிரதிநிதித்துவங்களைப் பெறப்பட்டன.

முதன்மையான காரணங்களாகும். இறக்குமதிகள் மீதான செஸ் வரியிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 55.0 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 44.0 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 79.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. அதேவேளை, ஏற்றுமதிகள் மீதான செஸ் வரி 2023 ஆம் ஆண்டில் ரூபா 2.2 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 2 பில்லியனாக சற்றுக் குறைந்துள்ளது. ஏற்றுமதி செஸ் வருமானத்தில் பங்களித்த முக்கிய பொருட்கள் தேயிலை மற்றும் தேங்காய். எனினும், அரசாங்கம் 2025 ஆம் ஆண்டில் செஸ் வரியிலிருந்து ரூபா 100 பில்லியன் வருமானத்தை எதிர்பார்க்கின்றது.

ஏனைய வரிகள்

தொலைதொடர்பு அறவீடு

பொருளாதார அழுத்தங்கள், பயனர்களை மிகவும் தாங்கத்தகு விலையில் கிடைக்கக்கூடிய பொதிகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு மாறுவதற்கு வழிவகுத்தமையால் பாரம்பரிய தொலைத்தொடர்பு சேவைகளுக்கான நுகர்வோர் செலவீடு குறைக்கப்பட்டதன் காரணமாக, தொலைத்தொடர்பு வரியிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 17.3 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 8.0 சதவீதம் குறைந்து, ரூபா 15.9 பில்லியனாக குறைவடைந்தது. பாரம்பரிய குரல் மற்றும் குறுஞ்செய்தி சேவைகளிலிருந்து இணைய அடிப்படையிலான தொடர்பு தளங்களுக்கான தொடர்ச்சியான பெயர்வும் வருமான சரிவுக்கு பங்களித்தது. நிலையான அணுகல் சேவை இணைப்புகள் 2023 ஆம் ஆண்டில் 2,308,000 ஆக இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் 2,122,000 ஆகக் குறைந்துள்ளது. இது பாரம்பரிய நிலையான சேவைகளில் தங்கியிருப்பதில் தொடர்ச்சியான குறைவைக் குறிக்கின்றது. 2023 ஆம் ஆண்டில் 28,986,000 ஆக இருந்த செல்லிடத் தொலைபேசி சந்தாதாரர்கள் 2024 ஆம் ஆண்டில் 28,820,000 ஆகக் குறைந்துள்ளனர். கையடக்கத் தொலைபேசி இணைய சேவைகள் உள்ளடங்கலாக இணையம் மற்றும் மின்னஞ்சல் சந்தாதாரர்கள் 2023 ஆம் ஆண்டில் 22,864,000 ஆக இருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டில் 23,149,000 ஆக அதிகரித்துள்ளதுள்ளனர். இது தரவு சார்ந்த (Data-driven) சேவைகளை நோக்கி தொடர்ச்சியாக பெயர்வதனை எடுத்துக்காட்டுகிறது.

புறப்படுகை அறவீடு

புறப்படுகை அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டின் ரூபா 38.8 பில்லியனிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 1.3 சதவீதத்தினால் மெதுவாக குறைவடைந்து ரூபா 38.3 பில்லியனாக காணப்பட்டது.புறப்படுகை அறவீட்டிலிருந்து வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, புறப்படுகை அறவீட்டினை சேகரிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள அதிகாரசபையின் சட்ட அமலாக்க திறன்களை வலுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. மேலும், விமான நிலையங்களுக்கு அதிகமான பயணிகளை

கட்டம் ..5 | சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் வர்த்தக வசதி

இலங்கை அரசாங்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி ஆசிய பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் ஐந்து (5) சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் / முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது:

- South தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (SAPTA) - ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவற்றை உள்ளடக்கியதுடன், 2006 சனவரி 01 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) – 2000 மார்ச் 01 முதல் நடைமுறைக்கு வந்தது.
- சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SSLFTA) – 2018 மே 01 அன்று நடைமுறைக்கு வந்தது.
- பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PSFTA) – 2005 ஜுன் 12 முதல் நடைமுறைக்கு வந்தது.
- இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLTFTA) – 2024 பிப்ரவரி 03 அன்று கையெழுத்தானது, ஆனால் அது இன்னும் செயற்படுத்தப்படவில்லை.

பேச்சுவார்த்தையின் கீழ் மேலும் ஐந்து (5) முன்மொழியப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் / முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்கள் (PTA) உள்ளன, அவை:

- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA)

முன்மொழியப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான வர்த்தக பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. 2016 முதல் 14 சுற்று விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன.

முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தின் நோக்கத்தில் பின்வரும் அத்தியாயங்கள் சேர்க்கப்படும்.

i. பொருட்கள் வர்த்தகம்
ii. சேவைகளில் வர்த்தகம்
iii. தோற்ற விதிகள்
iv. சுகாதாரம் மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகள்
v. வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள்
vi. பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு
vii. பிணக்குத் தீர்வு மற்றும் சட்ட அலுவல்கள்

முன்மொழியப்பட்ட பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் முதலீடு குறித்த ஒரு அத்தியாயத்தைச் சேர்க்க இலங்கையும் இந்தியாவும் ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட போதிலும், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் நோக்கத்திலிருந்து அதை விலக்கி முதலீட்டு விடயங்களில் விரைவாகப் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது..

- இலங்கை சீன சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (CSFTA)

  இது சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான முன்மொழியப்பட்ட இருதரப்பு வர்த்தக ஒப்பந்தமாகும். இது தொடர்பாக ஏற்கனவே 06 ஆவது சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. 07 ஆவது சுற்று பேச்சுவார்த்தை இரு நாடுகளின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெற முடிவு செய்யப்படும். மேலும், வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைத் துறை, இந்த இருதரப்பு அல்லது பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களில் மட்டுமே சரக்கு வர்த்தகம் (கட்டண தாராளமயமாக்கல் திட்டம்) பற்றிய அத்தியாயத்தில் பங்கேற்கிறது.

- இந்தோனேசியா இலங்கை முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்

  2023 ஜுலை 10 ஆந் திகதிய 23/1248/601/042 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் இலங்கைக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான முன்மொழியப்பட்ட முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்திற்கான (ISL PTA) பேச்சுவார்த்தையைத் தொடங்குவது குறித்த கட்சிகளின் கூட்டு அறிக்கையின்படி முதல் கூட்டம் 2024 ஏப்ரல் 03 முதல் 04 வரை மெய்நிகர் முறையில் நடைபெற்றது.

அட்டவணை 2.12 | அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு

ரூ.பில்லியன்

விடயம்	2023	2024 மதிப்பீடு	2024(அ)	மாற்றலுக்கான பிரதான காரணங்கள்
வருமான வரிகள்	911.4	1,080.0	1,026.2	2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் வருமான வரி மூலம் வருவாய் சேகரிப்பு 12.6 சதவீதத்தால் அதிகரித்து. வருடாந்திர மதிப்பீட்டில் 95.0 சதவீதத்தை எட்டியுள்ளது. 2024 ஆம் ஆண்டில் வருமான வரியிலிருந்து கிடைத்த உண்மையான வருமானம் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 5 சதவீதம் அல்லது ரூபா 53.8 பில்லியன் ஆகும். இதற்கு முக்கிய காரணங்களாக: - தனிநபர் வருமான வரிக்கான வரியற்ற வரம்பை ஆண்டொன்றுக்கு 3.0 மில்லியன் ரூபாவிலிருந்து 1.2 மில்லியன் ரூபா வரை குறைப்பதன் மூலம்வரி அடித்தளத்தை விரிவுபடுத்துவதன் முழு தாக்கம் - அரச மற்றும் தனியார் துறைகளில் சம்பள அதிகரிப்பு - பொருளாதார நடவடிக்கைகளின் புத்துயிர்ப்பு மற்றும் - வரி நிர்வாகத்தை வலுப்படுத்துதல்
பெறுமதி சேர் வரி	694.5	1,400.0	1,309.7	பெறுமதி சேர் வரி வருமானம் 2023 இல் ரூபா 694.5 பில்லியனிலிருந்து 2024 இல் ரூபா 1,309.7 பில்லியனாக 88.6 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து வருடாந்த மதிப்பீட்டின் 93.5 சதவீத அடைதலுடன் அதிகரித்துள்ளது. பெறுமதி சேர் வரியிலிருந்து வருவாயில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு முக்கியமாக இயக்கப்பட்டது: - 2024 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி வீதத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்துதல் - 2024 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரி பதிவு எல்லை ரூபா 80 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 60 மில்லியனாக குறைக்கப்பட்டது - ஜனவரி 1, 2024 முதல் நடைமுறைக்கு வரும் முக்கிய பொருட்களுக்கு பொருந்தக்கூடிய பெறுமதி சேர் வரி விலக்குகளை நீக்குதல் - 2023 ஆம் ஆண்டில் 16.8 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த மொத்த இறக்குமதி 2024 ஆம் ஆண்டில் 12.1 சதவீதம் அதிகரித்து 18.8 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது மற்றும் - பொருளாதார நடவடிக்கைகளின் மறுமலர்ச்சி.
உற்பத்தி வரி மற்றும் மதுவரி	469.6	545.0	598.5	2024 ஆம் ஆண்டில் உற்பத்திவரி மற்றும் மதுவரியிலிருந்து கிடைக்கும் வருவாய் 27.4 சதவீதத்தால் அதிகரித்து 598.5 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது, இது வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விட 53.5 பில்லியன் ரூபாயால் அதிகமாகும். இந்த செயல்திறன் முதன்மையாக உந்தப்பட்டது: - பணவீக்கம் சரிசெய்யப்பட்ட குறியீட்டின் அடிப்படையில் அனைத்து வகைகள் அல்லது மதுபானங்களுக்கும் பொருந்தக்கூடிய அலகு விகிதங்கள் மற்றும் உற்பத்திவரி மற்றும் மதுவரிகளைக் கொண்ட அனைத்து உற்பத்திவரி மற்றும் மதுவரிகளுக்கும் பொருந்தக்கூடிய உற்பத்திவரி மற்றும் மதுவரியை 14 சதவீதம் அதிகரித்தல் - அனைத்து வகையான பெட்ரோல் மற்றும் டீசல் இறக்குமதியின் நிகர அதிகரிப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய இறக்குமதியின் அதிகரிப்பு காரணமாக பெட்ரோலியம் மீதான உற்பத்திவரி அதிகரிப்பு - புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதித்தல் மற்றும் சில வாகன வகைகளில் தற்காலிகமாக விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துதல் காரணமாக மோட்டார் வாகன இறக்குமதி அதிகரிப்புடன் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்திவரியிலிருந்து வருவாய் அதிகரிப்பு மற்றும் - 2023 யூலை இல் நடைமுறைப்படுத்தப்பட்ட மது வரி விகித திருத்தங்களின் தாக்கத்தை உணர்ந்து மதுபானங்கள் மீதான மது வரியிலிருந்து வருவாய் அதிகரித்தல். இருப்பினும், சிகரெட்டுகளின் விற்பனை குறைவு அல்லது சிகரெட் வகைகளுக்குள் நுகர்வு நடத்தையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக சிகரெட்டுகளின் வருவாய் சற்று வீழ்ச்சியடைந்தது.
இறக்குமதித் தீர்வைகள்	105.1	175.0	111.1	இறக்குமதித் தீர்வை வருவாய் 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டில் 5.7 சதவீதத்தால் ரூபா 111.1 பில்லியனாக சிறிதளவு அதிகரித்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து 63.5 சதவீதமாகும். இந்த மிதமான வளர்ச்சி முதன்மையாக உந்தப்பட்டது:

ஈர்க்கும் பொருட்டு, கொழும்பு சர்வதேச விமான நிலையம்-ரத்மலானையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு 2025 ஆம் ஆண்டு மார்த்து 27 ஆம் திகதி முதல் அடுத்த ஒரு வருட காலத்திற்கு ஒரு நபருக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 60 என்ற பொருத்தமான புறப்படுகை அறவீட்டிலிருந்து 50 சதவித சலுகையை, அதாவது ஐக்கிய அமெரிக்க டொலர் 30 ஆக தொடரவும், யாழ்ப்பான சர்வதேச விமான நிலையத்தை பயன்படுத்தும் பயணிகளுக்கு 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 முதல் முதல் ஒரு வருட காலத்திற்கும், மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தில் திட்டமிடப்பட்ட விமானங்களை இயக்கத் தொடங்கும் விமான நிறுவனங்களுக்கு 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 28, வரை புறப்படுகை அறவீட்டிலிருந்து முழு சலுகையும் வழங்குவதை தொடரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு

பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 7.4 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2024 இல் 32.2 சதவீதம் அதிகரித்து ரூபா 9.8 பில்லியனாக கணிசமாக அதிகரித்துள்ளது. இது சுற்றுலாப் பயணிகளின் வருகை மீட்சியுடனான பொழுதுபோக்கு நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அத்தகைய சூதாட்ட வணிக இடத்திற்குள் நுழையும் இலங்கைப் பிரஜைகளுக்கு நுழைவுக் கட்டணம் விதிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. (ஒவ்வொரு பொருட்களிலிருந்தும் கிடைக்கும் வருமானம், உரிமக் கட்டணம் நுழைவுக் கட்டணம் போன்றவை.)

புத்தகத் தயாரிப்பாளர் அல்லது கேளிக்கை வணிகத்தை கொண்டுநடாத்தும் நபர்களுக்கு ஆண்டுதோறும் விதிக்கப்படும் வரியிலிருந்து கிடைக்கும் வருமானமானது, ரூ.பா 3.2 பில்லியனிலிருந்து 2024 இல் ரூபா 1.4 பில்லியனாக புதிய நிறுவனங்கள் இந்தத் கைத்தொழிற்றுறையில் உள்ளடக்கப்பட்டதால கணிசமாக அதிகரித்துள்ளது. மேலும், புத்தகத் தயாரிப்பாளர் அல்லது கேளிக்கை வணிகத்தின் மொத்த சேகரிப்பின் மீதான வரியானது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வரி விகிதம் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்பட்டதன் காரணமாக, 2023 ஆம் ஆண்டின் ரூபா 3.7 பில்லியன் ரூபாயிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 16.1 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 4.3 பில்லியனாக அதிகரித்துள்ளது.

வரி அல்லாத வருமானம்

பெயரளவு நியதிகளின் அடிப்படையில், வரி அல்லாத வருமானம் 2023 ஆம் ஆண்டில் ரூபா 328.3 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் 0.6 சதவீதத்தினால் குறைவடைந்து ரூபா 326.3 பில்லியனாக காணப்பட்டது. இது இலாபம், பங்குலாபம் மற்றும் பிற வரி அல்லாத வருமானங்களிலிருந்தான வருமான சேகரிப்பில் ஏற்பட்ட குறைவை பிரதிபலிக்கிறது. எவ்வாறெனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி அல்லாத வருமானம் 2023 ஆம் ஆண்டில் 1.2 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 0.1 சதவீத புள்ளிகள் குறைந்து 1.1 சதவீதமாக கானப்பட்டது. அதேவேளை, வட்டி வருமானத்திலிருந்தான வரி அல்லாத வருமானமானது வட்டி வீதங்கள் குறைக்கப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 26.2 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 57.8 பில்லியனாக 120.1 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. தண்டப்பனம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மூலம் கிடைக்கும் வருமானம் 5.6 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் ரூபா 146.6 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 154.7 பில்லியனாக அதிகரித்துள்ளது. சமூக பாதுகாப்பு பங்களிப்புகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 18.8 சதவீதம் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் ரூபா 36.3 பில்லியனாக இருந்த வரி அல்லாத வருமானம், 2024 ஆம் ஆண்டில் ரூபா 43.1 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. அதேவேளை வரி அல்லாத வருமானத்திற்கான பிற வளங்களிலிருந்தான வருமானம், 2023 ஆம் ஆண்டில் ரூபா 35.5 பில்லியனில் இருந்து 2024 ஆம் ஆண்டில் ரூபா 23.2 பில்லியனாக 34.7 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

அட்டவணை உ-11| வரியல்லாத வருமானம்

ரூபா. மில்லியன்

விடயம்	2023	2024(அ)	2023/2024 (% மாற்றம்)	2024 (மொத்த வரியல்லாத வருமானம் %)
வட்டி/வாடகை	33,231	64,192	93.2	19.7
இலாபங்கள், பங்கிலாபங்கள	75,701	41,080	-45.7	12.6
விற்பனைகள் / அறவீடுகள்	146,566	154,731	5.6	47.4
சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு	36,258	43,089	18.8	13.2
மத்திய வங்கி இலாப மாற்றல்கள்	1,029	–	–	–
ஏனையவை	35,474	23,170	-34.7	7.1
ஏனையவை	**328,259**	**326,261**	**-0.6**	**100.0**

மூலம் : திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம், அரச கணக்குகள் திணைக்களம் அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

கட்டம் உ.6 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி 2024 - ஏப்ரல் 2025

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான திருத்தங்கள்	
2025.04.01	2025 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் (திருத்தச்) சட்டம்

(1) தனிநபர் வருமான வரி (PIT) வீத அமைப்பு

தனிநபருக்கான தனிநபர் வருமான வரிச் சலுகையை ஆண்டொன்றுக்கு ரூபா 1,800,000/- வரை அதிகரித்தல் மற்றும் தனியாள் ஒருவரது வரி விதிக்கத்தக்க வருமானம் மீது ஏற்புடைய வரி வீதங்களை பின்வருமாறு திருத்தம் செய்தல்.

தனிநபர் வருமான வரி வீத அமைப்பு

	ஆண்டு வரி விதிக்கத்தக்க வருமானம் (ரூ.)	
விளிம்பு வரி விகிதம் (%)	முந்தைய விதிப்பு முறை	தற்போதைய வரி விதிப்பு முறை
0	1.2 மில்லியன் வரை	1.8 மில்லியன் வரை
6	1.2 - 1.7 மில்லியன்	1.8 - 2.8 மில்லியன்
12	1.7 - 2.2 மில்லியன்	-
18	2.2 - 2.7 மில்லியன்	2.8 - 3.3 மில்லியன்
24	2.7 - 3.2 மில்லியன்	3.3 - 3.8 மில்லியன்
30	3.2 - 3.7 மில்லியன்	3.8 - 4.3 மில்லியன்
36	3.7 மில்லியனுக்கும் மேல்	4.3 மில்லியனுக்கும் மேல்

2) நிறுவன வருமான வரி (CIT) வீதங்களின் திருத்தம்

(i) ஏதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தியின் ஏற்றுமதி தவிர்ந்த வேறேதேனும் மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தி, விற்பனை அல்லது இறக்குமதி மற்றும் விற்பனை என்பவற்றிலிருந்து பெறப்படும் இலாபங்கள் மீது ஏற்புடைய வருமான வரி வீதத்தினை 40 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக அதிகரித்தல்

(ii) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் சேவையாற்றும் ஏதேனும் சேவையிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய வருமான வரி வீதத்தை வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு வங்கியொன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற, இலங்கைக்கு வெளியில் பயன்படுத்தப்படக்கூடிய எந்தவொரு ஆளுக்கும் ஏற்புடைய வருமான வரி 15 வீதத்தை விதித்தல்.

(iii) ஏதேனும் வெளிநாட்டு வளங்களிலிருந்து உழைக்கப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபங்கள் மீது ஏற்புடைய வருமான வரி வீதங்களை விதித்தல், அத்தகைய இலாபம் உழைக்கப்படுகின்றவிடத்து அல்லது வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டு 15 சதவீத வங்கியின் ஊடாக இலங்கைக்கு அனுப்பப்படுகின்றவிடத்து, அத்தகைய இலாபங்கள் தொடர்பில் ஏற்புடைய வருமான வரி வீதங்களை விதித்தல்.

3) முற்கூட்டிய வருமான வரி வீதம் (பிடித்து வைத்தல் வரி வீதம்)

வட்டி அல்லது கழிவு மீதான ஏற்புடைய முற்பண வருமான வரி வீதத்தை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்தல்

2024.04.01	2024.03.21 ஆம் திகதிய 2376/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - அரச நிறுவனங்கள் உட்பட தனிநபர்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு கிரமம் செய்து கொள்ள வேண்டிய தகவல்களை விதித்துரைப்பதற்காக
முத்திரைத் தீர்வை- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
2025.04.01	2025.03.27 ஆம் திகதிய 2429/39 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - ஏதேனும் சொத்தின் குத்தகை அல்லது வாடகை தொடர்பான ஏதேனும் சாதனத்தின் மீது பொருந்தக்கூடிய முத்திரைத் தீர்வையை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தத்தில் (வாடகைக் கொள்முதல் ஒப்பந்தங்களைத் தவிர்த்து) குறிப்பிடப்பட்டுள்ள முழு காலத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த குத்தகை அல்லது வாடகை தொகை, அதில் எந்தவொரு முன்பணமும் உட்பட, ஒவ்வொரு ரூ.1,000 அல்லது அதன் ஒரு பகுதிக்காக ரூ.10 இலிருந்து ரூ.20 ஆக உயர்த்தல்.

அட்டவணை உ.12 | அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு தொடர்ச்சி...

ரூ.பில்லியன்

விடயம்	2023	2024 மதிப்பீடு	2024(அ)	மாற்றலுக்கான பிரதான காரணங்கள்
				- மார்ச் 29, 2023 முதல் இறக்குமதி வரி விகிதங்களை 0 சதவீதம், 10 சதவீதம் மற்றும் 15 சதவீதத்திலிருந்து சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதமாக உயர்த்துவதன் முழு தாக்கத்தை உணர்தல் - பால்மா மற்றும் கோதுமை மா மீதான வரிச்சலுகைகளை நீக்குதல், அதே போல் அரிசி இறக்குமதியை அதிகரித்தல் மற்றும் 2024 ஆம் ஆண்டில் மொத்த இறக்குமதி 12.1 சதவீதம் அதிகரித்துள்ளது.
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திஅறவீடு (து.வி.நி.அ.அ)	175.5	175.0	170.0	2024 ஆம் ஆண்டில் து.வி.நி.அ.அறவீட்டு வருமானம் 3.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 170.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. சரிவு முதன்மையாக உந்தப்பட்டது: - ஏப்ரல் 4, 2023 முதல் காப்பு வரிகளை படிப்படியாக நீக்குவதன் ஒரு பகுதியாக மொத்த து.வி.நி.அ. அறவீட்டு பொறுப்புள்ள பொருட்களின் 20 சதவீத விலக்கு. - 2024 மார்ச் 29 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பா-டுகளுக்கு அமைவாக சிங்கப்பூரிலிருந்து 3,117 பொருட்களுக்கு சலுகை வீ-தங்களைப் பிரயோகித்தல் மற்றும் பொருட்களை இறக்குமதி செய்யும் நேரத்-தில் 595 பொருட்களுக்கு விலக்களித்தல். து.வி.நி.அ.அ அறவீட்டு தளத்தில் குறைப்பு இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டில், து.வி.நி.அ.அ அறவீட்டின் உண்மையான வருவாய் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் 97.2 சதவீதத்தை எட்டியது, இது வலுவான இணக்கம் மற்றும் பயனுள்ள சேகரிப்பு பொறிமுறையைக் குறிக்கிறது.
விசேட வியாபாரப பண்ட அறவீடு (பி.பி.ப.அ)	51.3	95.0	115.2	2024 ஆம் ஆண்டில் விசேட வியாபார பண்ட அறவீட்டு வருமானம் 124.4 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்துள்ளது. இது முதன்மையாக உந்தப்பட்டது: - சர்க்கரை, உருளைக்கிழங்கு மீதான வரி விகிதங்களை உயர்த்துதல் மற்றும் முக்கிய பொருட்களின் இறக்குமதியை அதிகரித்தல். வி.வி.ப.அ வருவாய் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 121.3 சதவீதத்தை எட்டியது.
சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவிடு	216.2	250.0	250.9	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு வருவாய் 2024 இல் 16.0 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 250.9 பில்லியனாக அதிகரித்துள்ளது இது முதன்மையாக இயக்கப்பட்டது: - வரி இணக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டிற்காக பதிவுசெய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 2024 இல் 12,097 ஆக அதிகரித்துள்ளது. இது 2023 இல் 8,107 ஆக இருந்தது. - பதிவுக்கான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs) அறிமுகம் - ஆண்டொன்றுக்கு பதிவு செய்வதற்கான எல்லை 120 மில்லியன் ரூபாவிலிருந்து 60 மில்லியன் ரூபாவாக குறைக்கப்பட்டது மற்றும் - பொருளாதார நடவடிக்கைகளின் துரிதத்துடன் 2024 இல் இறக்குமதியின் 12.1 சதவீத அதிகரிப்பு. 2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து குறிப்பிடத்தக்க விலகல் கவனிக்கப்படவில்லை. உண்மையான வருமான அடைவு ஆண்டு மதிப்பீடுகளில் 100.3 சதவீதத்தை எட்டியது
ஏனைய வரிகள்	97.0	100.0	122.9	ஏனைய வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் 26.7 வீதத்தால் கணிசமாக அதிகரித்து 122.9 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது முதன்மையாக இயக்கப்பட்டது: - இறக்குமதி அதிகரிப்பு காரணமாக செஸ் வரி மூலம் கிடைக்கும் வருவாய் 41.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது - மோட்டார் வாகனங்கள், பந்தயம் மற்றும் சூதாட்ட விதிப்பு மற்றும் பங்கு பரிவர்த்தனை விதிப்பனவு மீதான ஆடம்பர வரி மூலம் அதிகரித்த வருமானம். எனினும், தொலைத்தொடர்பு வரியிலிருந்து கிடைக்கும் வருவாய் வீழ்ச்சியடைந்துள்ளது. எவ்வாறாயினும், ஏனைய வரிகளின் வருமான சேகரிப்பானது வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை விஞ்சியதுடன், 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டை 22.9 பில்லியன் ரூபாவால் விஞ்சியுள்ளது.
வரி அல்லாத வருமானம்	328.3	287.0	326.3	அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் பங்கிலாபங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் 45.7 சதவீதத்தாலும், வாடகை 8.0 சதவீதத்தாலும், ஏனைய வரியல்லாத வருவாய் 7.6 சதவீதத்தாலும் குறைக்கப்பட்டமையால் வரியல்லாத வருவாய் 0.6 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், அபராதம், கட்டணங்கள் மற்றும் கட்டணங்கள் மற்றும் வட்டி வருமானம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் வரி அல்லாத வருவாயை வலுப்படுத்த உதவியது. 2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 113.7 சதவீதத்தை வரி அல்லாத வருவாய் ஈட்டியுள்ளது
மொத்தம்	3,048.8	4,107.0	4,030.8	

அரசிறைக்கொள்கைத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டது

(அ) தற்காலிகம்

கட்டம் 2.6 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி 2024 - ஏப்ரல் 2025 தொடர்ச்சி...	
2025.04.11	4) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் திரவ பால் மற்றும் தயிர் வழங்கலுக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்கு அளித்தல்.
01.10.2025 திகதி முதல்	5) 2025 ஒக்டோபர் 01 ஆம் திகதியிலிருந்து இலத்திரனியல் தளத்தினூடாக வதிவற்றோரினால் வழங்கப்படும் சேவைகளுக்கு பெறுமதி சேர் வரியை விதித்தல்.
01.10.2025 திகதி முதல்	6) 2025 ஒக்டோபர் 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையினை நீக்குதல் மற்றும் மீளளிப்பு செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக இடர்நேர்வு அடிப்படையிலான மீளளிப்பு பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்.
